தேசீய கதா மாலிகா-மலர் 1.

Dasia katha Malika Malar

# விசாலாட்சி

அல்லது

# கட்டு நீங்கிய காரிகை.

ஆக்கியோன்,

இ. சிவம்,

உதவியாசிரியர், குமரன், காரைக்குடி.

மறைமலையடிகள் நூ... MARAIMALAI A... LIBRARY MADRAS ... சென்னை

[இதன் விலை 1931. அணா ஆறு.]

# முகவுரை.

—o—

"எந்த நாடு பெண்களை அடிமைப் படுத்துகின்றதோ அந்த நாடு அடிமைப் படவேசெய்யும்; பெண்கள் விடுதலையையன்றி நாட்டிற்கு விடுதலை வேறில்லை." என்கின்ற கொள்கையை வற்புறுத்தி, நம் தேசம் தற்போது பெண்கட்கு இழைத்துவரும் கொடுமைகளை எடுத்துக் காட்டவே "தேசியகதா மாலிகா"வின் முதல் மலராகிய இப்புத்தகத்தை வெளியிடுகின்றோம். இதில் பெரும்பாலும் நடை முறையில் காணப்படுகின்ற விஷயங்களும் அறிஞர்களால் போதிக்கப்படுகின்ற அறிவுரைகளுமே தொகுக்கப் பட்டிருக்கின்றன. எவ்வித பேத உணர்ச்சியுமின்றி ஆண்களும் பெண்களும் இதனை வாசித்து நன்றாகச் சிந்திக்கவேண்டுமென்பது எமது பேரவா.

இப்புத்தகத்தை விரைவில் அச்சிட்டு வெளியிட உதவிபுரிந்த எமது நண்பர்கட்கு எம்மனமார்ந்தநன்றி உரியதாகுக. E. S.

# விசாலாட்சி

## அல்லது

# கட்டு நீங்கிய காரிகை.

## அத்தியாயம் 1.

### கண்ணாடி பார்த்த கட்டழகி.

பகல் நான்கு மணி யிருக்கும். விசாலாட்சி மட்டிலும் தனிமையாக வீட்டிலுட்கார்ந்துகொண்டிருந்தாள். அவளது தாய் தந்தையரும் வேலைக்காரியான சிகப்பியும் திருமயத்திலுள்ள சத்தியமூர்த்திப் பெருமாளை தரிசித்து வருவதற்காய்ப் போய் விட்டார்கள்.

மனிதர்கள் எப்போதும் சிந்தித்துக்கொண்டிருக்கு மியல்பினர். வேலையில்லாது ஓரிடத்தில் தனிமையாக இருக்கின்றபோழ்து மனிதனின் இருதயத்தில் பற்பல சிந்தனைகள் தோன்றிக்கொண்டேயிருக்கின்றன. அச் சிந்தனைகள் காலத்துக்கும் பருவத்துக்கும் தகுந்தவாறு வேறு வேறு வடிவத்தில் வாரா நிற்கும். இந்தச் சிந்தனையை எவனும் அடக்கிவிடவோ ஒடுக்கிவிடவோ முடியாது.

இவ்விதிக்கேற்ப,விசாலாட்சியும்தனிமையாகவீட்டுக்குள் இருந்துகொண்டிருக்கும்போது பற்பல விஷயங்கள் அவள் மனதில் தோன்றி மறைந்தன. அவற்றில் முற்றிலும் முதன்மை பெற்றிருந்தது நீண்ட

நாளாக அவளை அல்லற்படுத்திக்கொண்டிருந்த ஒரு விஷயமாகும். அது அவள் மனதில் கிளர்ந்ததும் மனம் சஞ்சலமடைய, அதில் நின்றும் தன் கவனத்தைத் திருப்புவதற்காக எதை எதையோ செய்து பார்த்தாள். முதலாவது வீட்டு வேலைகளில் சிலவற்றைச் செய்து முடிக்க முயன்றாள். வேலை பழக்கமின்மையால் அவற்றைச் செய்ய முடியவில்லை. இரண்டாவதாகப் பருப்பை எடுத்துக்கொணர்ந்து அதிலுள்ள கற்களை பொறுக்க முயன்றாள். அது சிரமமாகத் தோன்றியது. பின்னர் ஓலையை எடுத்து பெட்டி முடையப்பிரயாசைப்பட்டாள். அதுவும் உற்சாகத்தை யூட்டவில்லை. அப்பால் விறகுக் கொட்டிலில் எவருக்கும் தெரியாது பதுக்கிவைத்திருந்த நைடதத்தை எடுத்து ஒன்றிரண்டு தாளைத் திருப்பினாள். சந்திரோபாலம்பனப் படலம் வந்தது. அதில் ஒன்றிரண்டு செய்யுட்களைப் படித்ததும் உண்மையில் சந்திரனைக் கண்டு நெஞ்சம் துடிதுடித்தது தமயந்தியா அல்லது விசாலாட்சியா என்று சந்தேகம் பிறந்தது. நளன் மேல் விசாலாவே காதல் கொண்டுவிட்டதாக நினைத்தாள். எனவே பலப்பல எண்ணங்கள் ஒன்றின் மேலொன்றாகத் தோன்றி மறைந்தன. அவளது புத்தி சித்த அகங்காரங்களெல்லாம் ஒன்றாய் சேர்ந்து வேலை செய்து அவளை சித்திரவதை செய்ததுபோல் தோற்றிற்று. அவள் மனதில் நெடுநாளாக இருந்து வந்த எண்ணமெல்லாம் குதித்து எழுந்து நான்முந்தி நான்முந்தி என்று முன் வந்து நின்றன. எனவே ஒன்றும் புரியவில்லை. முகம் என்னும் குளிர்மதி கவலை, குழப்பமென்னும் மேகபடலங்களால் மூடுண்

டது. கைகால்கள் தளர்ச்சியுற்றன. பெருமூச்சு எழும்பிற்று. நெஞ்சு "படீர் படீர்" என்று அடிக்க வாரம்பித்தது. இவ்வண்ணமே சிறிது நேரம் கழிய, ஏதோ அவளுடைய நினைவுக்கு வந்தது. உடனே விரைவாக வீட்டின் மேன் மாடிக்குச் சென்றாள். அங்குள்ள ஓர் படுக்கையறையை நோக்கிக் கால்கள் சென்றன. அவ்வறையின் கதவு மூடப்பட்டுக்கிடந்தது. அதனைத்திறந்தாள். அப்போது யாரோ கீழே வாயிலை மூடுகின்ற சத்தம் கேட்டது. உடனே திடுக்கிட்டு "ஐயோ யாரோ வீட்டுக்குள் வந்துவிட்டார்கள். வெளிவாயிலை மூடாமலன்றோ வந்துவிட்டேன்." என்று தனக்குள் சொல்லி மனந்திடுக்கிட்டு ஓடி கீழே வந்தாள். அங்கு ஒருவரும் காணப்படவில்லை. விசாலா சந்தேகத்தோடு அங்கு மிங்குமாகப் பல அறைகளில் யாராவது நிற்கின்றார்களாவென்று தேடினாள். எங்கு மெவரும் காணப்படவில்லை. கதவு மூடியபடியே யிருந்தது. எனவே பக்கத்து வீடுகளிலுள்ள கதவுகள் மூடப்பட்ட சத்தத்தைத்தான் கேட்டிருக்கக்கூடுமென்று நினைத்து கதவை தாழிட்டுவிட்டு மீண்டும் மேன் மாடியிலுள்ள படுக்கையறைக்குச் சென்றாள்.

படுக்கை யறையென்றால் யாருடைய படுக்கை யறை? விசாலாட்சியின் படுக்கையறையா? அன்று; அவளுடையதன்று. அவள் ஓர் விதவை. 18-வயதில் அதாவது மணமான மூன்றுமாதம், கணவனை இழந்துவிட்டாள்—இல்லை கணவன் அவளை இழந்துவிட்டான். அது முதல் 22 ஆகிய இந்த வயது வரையிலும் அவள் ஓர் விதவையாகவே கணிக்கப்பட்டு வருகின்

அவள் ஓர் விதவையாகவே கணிக்கப்பட்டு வருகின்

ருள். அவளுக்கு பொதுவாக தமிழ்நாட்டு விதவை களுக்குள்ள எல்லா உபசாரமும், சிறப்பாக செட்டி யார் விதவைகளுக்குள்ள சகல உபசாரங்களும் முறை யே நடத்தப்பட்டுவந்தன. நேராக உணவு கொடா மலும், நாவுக்கு உருசியான ஆகாரம் வழங்காமலும், உடம்புக்குச் செழுமை பயக்கின்ற பொருள்களை யளி யாமலும், நல்ல ஆடைகளீயாமலும், அணிகள் எது வும் தாராமலும், புஷ்பம் முதலிய வாசனைத்திரவியங் களைத் தொட விடாமலும், சுபகாரியங்களில் சேர்த் துக் கொள்ளாமலும், மங்களகாரியம் செய்வா ரோடு கலந்து கொள்ள விடாமலும், தனிய றை கொடாமலும், சுருங்கச்சொன்னால் மனி தப் பிறவியென்றே எண்ணப்படாமலும் வைத்திருப் பதன்றோ நம்நாட்டில் விதவைகள் நடாத்தப்படும் முறை? இந்த முறைகளிலிருந்து சிறிதும் வழுவாமல் விசாலாட்சியும் அவள் தாய் தந்தையரான அலமேலு ஆச்சியினாலும் விஸ்வநாதன் செட்டியாராலும் நடத் தப்பட்டு வந்தாள். அதனைக்கண்ட விசாலா புரு ஷனை பறிகொடுத்த அன்றுமுதல் பாம்பும் தேளும், புலியும் சிங்கமும் கூடிவாழும் கொடிய படுகுழியில் தள்ளப்பட்டு விட்டதாக நினைத்தாள். அவளுக்கு புருஷன் மறைந்ததோடு உலக வின்பமெல்லாம் என் றும் மீளாமல் மறைந்துவிட்டனவென்று தெரிந்தது. அதோடு அவளை பிறர் ஓர் கொடும்பாவி யென் றெண்ணுவதாகவும் கண்டாள். சிலகால் 'விசாலா என்ன பாவம் செய்ததினாலோ இந்தக்கதிக் காளா னாள்' என்று சிலர் சொல்வது அவள் காதில் விழுந் தது. கல்யாணம், புதுமை முதலிய விஷயங்களைப் பற்றிப் பேசும்போது அவளை சமீபத்தில் வைத்துக்

கொள்ளவும் செய்ததில்லை யென்பது அவளிருதயத்தைத் துண்டு துண்டாய் கிழித்தது. 70,80 வயது கிழவிகளோடு சரிசமானமாயிருக்கும்படி கட்டளையிடப்பட்டது அவளுக்கு என்றுமடங்கா வேதனையை கொடுத்தது. கொஞ்சநாளைக்குப்பிறகு தாய் தந்தையர் கூட அவளையோர் துரதிர்ஷ்டப்பிராணி என்று மதிப்பதாக கண்டாள். சுருங்கச்சொல்லின் அவள் ஓர் அடிமைப் பட்ட, நாயினும் கடையான, உலகில் இறந்து போவதைத்தவிர உயிர்வாழ யோக்கியதை இல்லாத ஜந்துவாக நினைக்கப்படுவதாகக் கண்டாள். அவளுக்கு சுதந்திரமென்பதே கொடுக்கப்படவில்லை. சிறிது கிடைத்ததென்றால் அது கோயில்கட்குப் போவதிலும் தீர்த்தமாடுவதிலும் திதிவழங்குவதிலுமேதான். இந்த உரிமை கொடுக்கப்பட்டதின் உத்தேசம் அவள் இவ்வுலகத்தை விட்டு மறு உலகம் புக ஆயத்தம் செய்து கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சியை உண்டுபண்ணுவதற்காம். இவ்விதகொடுமைகளுக்கெல்லாம்விசாலாட்சி எப்படி திடீரென்று ஆளாகி விட்டாளென்பது தெரியவில்லை. நீண்ட நாட்களாக யோசித்து யோசித்துப் பார்த்தாள்; இடையில் வந்து இடையில் போன ஒருவருடைய சேர்க்கையைப் பெற்று அதனை கொஞ்சநாளைக்குப் பின் இழந்து விட்டதைத்தவிர வேறு யாதொரு தவறுதலும் செய்ததாகத் தெரியவில்லை. எனவே தயங்கினாள். நாளும் எண்ணி எண்ணி உளமுடைந்தாள். தாய் தந்தையரும் சுற்றத்தாரும் சமுதாயத்தாரும் அவளுக்குச் செய்யும் கொடுமை பொறுக்கமுடியாததென்றும், அபாண்டமும் ஆதாரமற்றதும் மனிதத்தன்மையற்றதுமாகுமென்று மெண்ணினாள். எனவே

நாளடைவில் விசாலா தனது வாழ்க்கையில் ஒரு விதவெறுப்பும், அருவருப்பும் கொண்டதோடு, உலக ஜீவிதத்தையோர் பெரும்பாரமென்று மெண்ணினாள்.

இத்தகைய ஒரு விதவைப் பெண்ணுக்குச் சொந்தமாக ஓர் படுக்கையறை யிருக்க முடியுமா? எனவே விசாலாட்சி புகுந்தது அவளுடைய படுக்கையறைக்குளன்று. அவளுடைய தாய தந்தையர்களுடைய படுக்கையறைக்குள்ளேயே சென்றாள். இளைஞர்களுக்குள் இத்தகைய உணர்ச்சிவருவது இயற்கை எனவும் அது மறுக்க முடியாத ஒன்றெனவும் மனித இயற்கையை உணர்ந்தோர் ஒப்புக் கொள்ளுவர் என்பதில் சந்தேகமில்லை. நிற்க,

படுக்கை யறைக்குள் சென்ற விசாலாட்சி அங்கிருந்த காட்சிகளைக் கண்டதும் மனம் கொதித்தாள். அவ்வறையின் சிங்காரத்தோற்றமும், சிறந்த அமைப்பும், சீரிய நோக்கும் அவளது மனதைக் கவர்ந்தன. அவ்வறையின் சுவர்களில் பெரும்பாகமும் சிலிங் முற்றிலும் பெரிய பெரிய நிலைக்கண்ணாடிகள் பதிக்கப்பட்டிருந்தன. எனவே அங்கு ஒருவர் உருளவோ புரளவோ நடக்கவோ குதிக்கவோ வேறு எதைச் செய்த போதிலும் மேற்பாகத்திலும் நான்கு பக்கங்களிலும் அச்செய்கை பிரதி பிம்பிக்கும். விஸ்வநாதன் செட்டியார் படுக்கையறைக்கென்றே இவ்வளவு பெரிய கண்ணாடிகளை வரவழைத்திருந்தார். இதனைக் கண்ட விசாலாட்சி மனைவியின்பத்தை உள்ளதை உள்ளபடியே அனுபவிக்கின்ற ஒருவனுண்டெனில்— அதில் திளைக்கின்ற ஒருவனுண்டெனில்—அவனே

தனது தந்தை விஸ்வநாதன் செட்டியார் என்று எண்ணினாள்.

சுவர்களில் நிலைக்கண்ணாடி பதிக்கப்பட்ட இடங்கள் போக எஞ்சிய பாகத்தில் பெரிய பெரிய நிர்வாணப்படங்களிருந்தன. அவைகளில் சிலவற்றில் காதலர்கள் காதலிகள் பாதங்களில் விழுந்து பணிவது போன்ற சித்திரம் எழுதப்பட்டிருந்தது; சிலவற்றில் இருகாதலர்கள் கூடி ஆடிக் கொஞ்சிக்குலாவிப் பொழுதைப்போக்குகின்ற சித்திரம் வரையப்பட்டிருந்தது. சிலவற்றில் தம்மாசைக் கிழத்தியின் அணிபெறுமுடலின் அழகொழுகின்பலீலைத் தொகைகளைக் கண்டு வியப்புறும் ஆடவர் சித்திரம் சிதைக்கப்பட்டிருந்தது. இன்னும் சிலவற்றில் அழகிய பூம் பொழிலின்வாய் காதலர் ஓடியாடி யொளித்து விளையாடும் காட்சி தீட்டப்பட்டிருந்தது. மற்றும் சிலவற்றில் படிகம் போல் பாயும் பாலையொத்த அருவிகளில் காதலர்கள் நீராடும் படம் பொறிக்கப்பட்டிருந்தது. இந்நிர்வாணப்படங்களோடு வேணுகோபாலனும் கோபமங்கையரும்விளையாடும் படமும், கோபிகா வஸ்திராபஹரண ஓவியமும், ராதாகிருஷ்ண லீலையும் அடங்கிய ரவிவர்மாப் படங்களும் இருந்தன. இவற்றிற்குப் புறம்பாக அரிய பெரிய நாடகமங்கைகளின் "திருவுருவ"ப்படங்களும் இலங்கின. இவற்றையெல்லாம் கண்டதும் விசாலாட்சியின் மனம் வெந்து கருகி, எரிந்து நீறுயிற்று. நெஞ்சு பட படவென்றடிக்க பலதரம் பெருமூச்சுவிட்டாள். "ஆ! இவ்வளவு இன்பமயமான உலகத்தையா எனக்கு மறைத்து வைத்து அடுப்படியிலும் விராட்டிக்கொட்டிலிலும், விறகுப் பொந்திலும் இட

மளித்து வதைத்து வருகின்றார்கள்'' என்று எண்ணி ஏங்கினாள். நிற்க,

அவ்வறையில் மேற்படிப் படங்களைத் தவிர இத்தாலிய சிற்பிகள் செய்த பல நிர்வாணப் பதுமைகளுமிருந்தன. சலவை கற்களினால் செய்யப்பட்டு உயிர் பெற்றுவிட்டாற் போல் இலங்கிக்கொண்டிருந்த அப்பதுமைகள் தோற்றத்தால் விசாலாவுக்கு ஆதியில் நாணத்தை கொடுத்தன வெனினும், கடைசியில் தான் தனியாகவே அங்கிருக்கின்றாள் என்ற உணர்ச்சி ஏற்பட்டதும் கண் குளிர அவற்றைப் பார்த்துப்பார்த்து விம்மி விம்மி, ஏங்கி ஏங்கி, நெடுமூச்சுயிர்த்து உயிர்த்து தன் நிலைமையையும் தனக்கு சமுதாயம் விதிக்கும் கட்டளைகளையும் கொடுமைகளையும் கடிந்தின்புற்றாள். இடையிடையே வாய்விட்டு "என் தந்தையைப்போன்ற ஒரு கிழவன் இத்தகைய சிங்காரக்கடலில் அழுந்தி ஆனந்தமடைய, இளமங்கையாகிய என்னை இவ்வாறு தவிக்க விடுவதென்றால் கொஞ்சமாவது—ஒரு துளியேனும் ஒரு இம்மியளவேனும்—நீதி, ஒழுங்கு, தருமம், நியாயம் இருக்கின்றதா?'' என்று புலம்பினாள்.

அந்த ஹாலின் நடுவில் (ஆர்ட்டிபிஷல் பௌண்டன்) செயற்கை அருவி ஒன்று செய்யப்பட்டிருந்தது. அதனைச்சுற்றி 3 தொட்டிகளிணைக்கப்பட்டிருந்தன. அவற்றில் மூன்று பேர் உட்கார்ந்து நீராடி இன்புறலாம். அத்தொட்டிகட்குச் சமீபத்தில் அழகிய ஸ்டாண்டுகளில் சோப், செண்டு, பன்னீர், அத்தர் முதலியவை வைக்கப்பட்டிருந்தன. அவைகளெல்லாம்

பலதடவை உபயோகிக்கப்பட்டிருந்தன வென்பது அவ்வைகளின் தோற்றத்தால் புலனாயிற்று. செயற்கை யருவிக்கு நாலுதிசைகளிலும் சில அழகிய ஸ்பிரிங் கட்டில்கள் கிடந்தன. ஒரு கட்டிலினருகாமையில் ஒரு ஆட்டோமாட்டிக் பிரேக்குள்ள ஒரு "ஹிஸ் மாஸ்டேர்ஸ் வாயிஸ்" கிராமபோனிருந்தது. விசாலாட்சி அதிலிருந்து வரும் சத்தத்தை பல தடவை கேட்டிருக்கின்றாள். ஆனால் உண்மையில் பெட்டி எப்படி யிருந்தது என்றும் எப்படி சத்தம் வந்தது என்றும் அப்பொழுதுதான் காணவும் யூகிக்கவும் செய்தாள்.

இவற்றையெல்லாம் காணும்போது நமது விசாலாட்சியின் மனம் எப்படியிருக்கும்? அவள் ஏங்குவதைத் தவிர வேறு என்ன செய்திருப்பாள்? அவளுக்கு என்றேனும் இத்தகைய ஓர் படுக்கையறையில் புகுந்து இன்பமனுபவிக்கக்கூடுமோ? அந்த நாள் எப்போது வரும்? இத்தகைய எண்ணம் அவள் மனதில் முளைத்து வளரத் தொடங்கியது. எனவே உடல் நடுங்கினாள்; உளம் மாள்கினாள்; உணர்ச்சி குன்றினாள். ஆ! என்றைக்கு அவளுக்கு அத்தகைய இன்பமனுபவிக்கும் நாள் வரும்? விதவையாவதோடு நாம் நம் பெண்ணரசுகளைக் கொன்று பிணங்களாக்கிவிடுகின்றோமன்றோ? விசாலாட்சி கண்ணீர் சிந்தினாள். அப்பால் "இங்குள்ள சாமான்களையாவது பார்த்து மனதைத் திருப்திப்படுத்துகிறேனே"ன்று தனக்குள் கூறிக்கொண்டு ஒவ்வொரு சாமானகப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். பல பெட்டிகளையும் புட்டிகளையும் பார்த்துவிட்டு ஒரு

பீரோவைத் திறந்தாள். அதற்குள் பல இனிய தமிழ் நாவல்களிருந்தன. அவற்றை இராக்காலங்களில் விஸ்வநாதன் செட்டியார் வாசிப்பதையும் அலர்மேலு கேட்டுக்கொண்டிருப்பதையும் விசாலா கேட்டிருக்கிறாள். அந்த நாவல்களையெல்லாம் பார்த்த பிறகு அங்கிருந்த ஒரு நகைப்பெட்டியைத் திறந்தாள். அதற்குள் சுமார் $1\frac{1}{4}$ லட்சம் பெறுமானமுள்ள வைர நகைகளிருந்தன. அவற்றை ஆசைதீர—இல்லை வயிறெரிய—எடுத்தெடுத்துப் பார்த்தாள். அப்பால் அண்மையிலிருந்த ஒரு தோல் பெட்டியைத் திறந்தாள். அதற்குள் விலையுயர்ந்த பல பட்டாடை களிருந்தன. அவற்றை கையில் எடுத்ததும், கொடிய மாயப், பெண்பேய்கள் கண்கள் வீசி, காமிகளாகிய புருஷர்களை மயக்கி தம்பால் வசீகரித்துக் கொள்வது போல அவற்றின் பளபளப்பும் மினுமினுப்பும் விசாலாவின் கண்ணைக்கவர்ந்தன. அவள் அதில் ஈடுபட்டாள். எனவே சிறிது நேரம் அப்பட்டாடைகளைப் பார்த்துக் கொண்டிருந்ததும் அவளுக்கு யாதோ ஒரு எண்ணம் வர வாயிலண்டைவந்து வெளியே பார்த்தாள். அங்கு யாரிருந்தார்கள்? ஒருவருமில்லையன்றோ? எனவே உள்ளே சென்று ஓர் விலையுயர்ந்த வர்ணப்புடவையை எடுத்து நாகரிகமான முறையில் இடுப்பில் கட்டினாள். பின், ஒரு பட்டு ஜாக்கட்டை எடுத்தணிந்தாள். 40 வயதான தாய் ஜாக்கட் டுபயோகித்து வந்தாள் என்பது விசாலாவின் மனதைவெட்கத்தில் ஆழ்த்தியது. பிறகு ஆடையையும் ஜாக்கட்டையும் அணிபெற இழுத்துவிட்டு தகுந்தவிடங்களில் வைரமிழைத்த கோல்டு சேப்டிபின்களை இறுகக்குத்

தினாள். அப்பால் வாஸ்லேன் சீப்பு ஆகியவற்றை எடுத்துக் கொண்டு ஒரு கண்ணாடியின் முன்னின்று தலையைக்கோதி சடைபின்னினாள். அதன் மேல் அழகிய ரிபண்களை கோத்து அழகுபடுத்தினாள். பின்னர் ஒவ்வொரு வைர நகையாக வெடுத்து உடம்பில் தகுந்தவிடங்களில் அணிந்தாள். காலில் ஓர் பூட்ஸை எடுத்துப் போட்டாள். நெற்றியில் சவ்வாதுப் பொட்டு வைத்தாள். தன் தந்தையார் ஒரு போதுமுபயோகியாததும் எனவே தாயார்தான் உபயோகப்படுத்தியிருக்க வேண்டுமென்று அவள் எண்ணியதுமான ஓர் ரிஸ்டுவாட்சைக் கையில் கட்டினாள். பிறகு ஒரு கண்ணாடிமுன் சென்று நின்று பாதாதிகேசம் தன்னழகைப்பார்த்தாள். அவளது முகமிருண்டது; கண்கள்நீர்வார்த்தன. இருதயம் எழும்பிஎழும்பி அமர பெருமூச்சுபாய்ந்தது. "ஆ! இவ்வளவுஅழகுடைய என்னையா தரையில் படுக்கவைத்து, ஒருவேளை இருவேளை உப்பில்லாசோறிட்டுவெள்ளைச்சேலைகட்டி நகைகளுக்கு மெனக்கும் சம்பந்தமில்லாமல் செய்து கெடுத்திருக்கின்றனர்" என்று வாய்விட்டுக் கூறினாள். அவள் தம்வடிவழகை பலநாளுக்கு பிறகு அன்றுதான் முதலில் காண்கின்றாள். அவளது உள்ளம் அழகினால் கிளர்ந்தது; ஆனால் தனது நிலைமையை எண்ணி சாலவும் அழிந்தது.

கண்ணாடியில் விசாலா எவ்வாறு தோற்றினாள் என்று எழுதமுடியாது. அவளது முகம் சிறிது கவலையால் இருண்டிருந்த தெனினும் வியப்பினால் அகன்றது; அதனை பண்டையப் புலவர்களுடைய பாஷையில் கூறுவதானால் ஒரு முழுமதியென்றே

மலர்தாமரை யென்றே தான் சொல்லவேண்டும்; சொன்னால் சரியாக அவளது முக அழகை எடுத்துச் சொல்லியவராகமாட்டோம். சந்திர பிம்பத்திலுள்ள பொன்மையும் வசீகரமும் மட்டிலும் அவளுடையமுகத்திலிருந்தன வென்றால் ஒருவாறு அமையும்.

இச் செட்டிமார் நாட்டில் அவளுக்கிணையான ஓர் மாது இல்லை. அவளது உடற்கட்டும், உடலின் செழுமையும், அதில் பொதிந்த இளமையும் எல்லாம் ஆ! இத்தனைநாளும் எங்கு ஒதுங்கிக்கிடந்தனவோ! விசாலாவணிந்த நவீன உடையின் கீழ் எல்லாம் ஒன்றாக வந்து கூடின. அவளது எழிலை சுருக்கமாகக் கூறினால், பாரதியாரின் பாடலைப் பிழிந்த சாற்றினோடு சந்திரபிம்பத்தின் பொன்மையையும் பசுமையையும் கூட்டி, காந்திஜியின் வசீகரத்தைச் சேர்த்துக் குழைத்து அமைத்த ஓர் கட்டழகி போல் தோன்றினாள் என்னலாம். எனில் அவளுக்கு நாமோர் மதிப்புரை கூறவும் வேண்டுமோ? அவளை அவளே காதலித்தாள்; அதோடு அவள் அவ்வண்ணமே எக்காலமும் வாழ்வதற்கான ஓர் நாளை எதிர்பார்க்கவும் செய்தாள். இந்த நிலைமையில் அவள் தன்னழகிலீடுபட்டு வாயிலுக்கெதிராகவிருந்த நிலைக்கண்ணாடியைப் பார்த்து தனது அழகைப் பருகிக் கொண்டே நின்றபோது திடீரென்று ஓர் ஆணுருவம் தோன்றி அவளுடைய பிரதி பிம்பத்தை யொட்டி நின்றது. எனவே திடுக்கிட்டுத் திரும்பி நோக்கினாள். தியாகராஜன் என்ற வாலிபர் புன்னகை தவழ்ந்த இனிய முகத்தோடு

அங்கு விசாலாவின் அழகைக் கண்களென்னும் வாயினால் பருகியவண்ணம் நின்றுகொண்டிருந்தார்.

## அத்தியாயம் 2.

### காதல் பயிர்.

நமது கதை பள்ளத்தூரில் நடைபெறுகின்றதென்றும், விஸ்வநாதன் செட்டியார் அங்குள்ள ஓர் பிரபலஸ்தர் என்றும் வாசகர்கள் உணரல் வேண்டும். திரு. செட்டியாருக்கு சுமார் 28 லட்சத்துக்கு ஆஸ்தியுண்டு; பர்மாவிலும், சிங்கப்பூர், செய்கோன், மீடாண் ஆகிய இடங்களிலும் அவருக்குச் சொந்தமான கடைகளிருந்தன. திரு. செட்டியார் பெரிய ஆஸ்திமானென்பதோடு, கொஞ்சம் கல்வியறிவும் உலக அநுபவமும் பெற்றிருந்தார். என்றாலும் ஓர் பெரியவைதீகர். உலகம் எப்பொழுதும் கீழ் நோக்கியே சென்று கொண்டிருக்கின்றதென்பதும் பண்டைக்காலம் தெய்வீகம் பொருந்திய காலமென்பதும் அவாது கொள்கை. அவர் அல்லும் பகலும் அனவரதமும் பூர்வீக முனிவர்களின் மேன்மையையும் சிறப்பையுமே புகழ்ந்துகொண்டிருப்பார். இந்தியாவில் எப்பொழுது முனிவர் கண்ட முற்காலவழக்க ஒழுக்கங்கள் மல்குகின்றனவோ அப்பொழுதேதான் நாடு க்ஷேமமடையுமென்பது அவர்கருத்து. காங்கிரசும் காந்தியும் அவருக்கு வேம்பாம். சீர்திருத்த மென்றால் வயிறெரியும். சுயமரியாதை என்ற பெயரைக் கேட்டபோதே வாந்தியெடுப்பார். கெட்டகாலத்தின் பயனாகவே இந்தியர் சுதந்திரம் பேசுகின்றனர் என்பது அவரது மனமார்ந்த கருத்து. "பெண்கள்

விடுதலையே நாட்டின் விடுதலை" யென்று எவரேனும் கூறிவிட்டால் செட்டியார் புலி, சிறுத்தை, சிங்கம் மாதிரி சீறி விழுவார். பெண்களை அடக்கியொடுக்கி அடிமைப்படுத்துவதுதான் புருஷர் கடமையென்பது அவரது அபிப்பிராயம். ஆனால் அவரது மனைவியை மட்டிலும் அவர் நடத்தி வந்த முறை பெரிய விந்தையாகவிருந்தது. அவளோடு உண்டு களித்திருப்பதைக் கண்டால், பெரிய சமத்துவவாதிபோல் தோன்றும். அப்போது எல்லா வேதாந்தங்களையும் மூலையிலெறிந்துவிடுவார். என்றாலும் அவர் திருநீற்றின் பெருமையையும் வைதீகத்தின் சிறப்பையும் பற்றி பிரசங்கியாத நேரத்தைக் காண முடியாது. அவர் பரமசிவனிடத்தில் அளவிறந்த அன்பு காட்டுவார். சிவநேசர் திருக்கூட்டத்தில் சேராமற்போனாலும் பிரதோஷக் கூட்டத்திற்குப் பலதரம் பணங் கொடுத்திருக்கிறார். இவர் நீண்ட நாளாக திருச்சியில் ஒரு கடைவைத்திருந்ததினால் பட்டண வாழ்க்கையையும் பட்டண நாகரிகத்தையும் ஒருவாறு தெரிந்திருந்தார் என்னலாம். ஆதலால் தான் செட்டியார் தம் படுக்கையறையை தற்கால முறையில் அமைத்திருக்கக் காண்கின்றோம்.

விஸ்வநாதன் செட்டியாருக்கு விசாலாட்சியைத் தவிர வேறு குழந்தைகளே கிடையாது. அவளை அவர் குழந்தைப்பருவம் முதல் வெகு செல்வமாகப் பாராமரித்து வந்தார். அவரது சமுதாயம் தற்போது கொஞ்சம் திரும்பி வருவதற்கிணங்க விசாலாட்சியை குழந்தைப்பருவத்தில் பள்ளிக்கூடத்திற்கனுப்பினார். அவள் எப்படியோ தன் சுற்றுப் பக்கத்து குழந்தை

களைவிடக் கொஞ்சம் சுறு சுறுப்போடும் கவனத் தோடும் கல்விகற்று வகுப்புகளில் முதன்மையாக விளங்கினாள். பெண்கள் நமது நாட்டில் எப்படிப் படித்தால்தானென்ன? நாம் கன்னிமேயோ போன்ற வெளிநாட்டவர்களிடத்தில் நற்சாட்சிப் பத்திரம் பெற்றவர்களல்லவா? விசாலாட்சி 4-வது வகுப்பில் தேர்ச்சியடைந்ததும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்படவில்லை. வீட்டில் சிகப்பியோடு அடுப்பூதவும் சுப்பனோடு சந்தைக்குப் போகவும் காய் கறிவாங்கவும் மற்ற சமயங்களில் எருத்தட்டவுமாக அமர்த்தப்பட்டாள். தனது சுற்றுப்புறங்கள் எப்படியிருக்கின்றனவோ அப்படியேதான் ஒரு ஜீவன் உருவடையும் என்பது இயற்கை உண்மை. என்றாலும், விசாலா தன் சுற்றத்தைப் போல எருத்தட்டுவதிலும் அடுப்பூதுவதிலும் ஈடுபட்ட போதிலும் தகுந்த சமயம் வாய்த்த பொழுதெல்லாம் புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றைப்படித்துவந்தாள். எனவே பள்ளிக்கூடம் விட்ட சிறிது நாட்களுக்குள் பாரதியார் பாடல் முழுதும் நன்றாய் கற்றுவிட்டதோடு சீர்திருத்தக்காரர்களால் எழுதப்பட்ட பல தமிழ் நூல்களையும் படித்துணர்ந்தாள். அதற்கு விஸ்வநாதன் செட்டியார் குறிப்பிடத்தகுந்த தடையேதுவும் செய்யவில்லை. அவருக்குத் தமது குழந்தையை எவரேனும் கல்வியறிவுடையவர்கட்டக்கூடும், அப்படியானால் கொஞ்சம் எழுத்துவாசனை இருக்க வேண்டுமென்ற எண்ணமிருந்தது. எனவே அவளது 18வது வயதில் அதாவது கல்யாணம் செய்யப்பட்ட சமயத்தில் பல நூல்களைக்கற்ற அறிவும், நைடதம் போன்ற காப்பியங்களை வாசித்துணரும் ஆற்றலுமிருந்தது.

அலர்மேலுவுக்கு விசாலாவின்படிப்புச் சிறிதும் பிடிக்கவில்லை. "அடுப்பூதும் பெண்களுக்கு படிப் பேதுக்கு" என்று கூறி அவளுடைய ஊக்கத்தை இடையிடையே கெடுத்துவந்தாள்.

என்றாலும் விசாலா படிப்பில் கவனம் செலுத் தாதிருக்கவில்லை. விதவையான காலத்தில் அவளுக்கு சிறிது ஆறுதலளித்தது ஒன்றுண்டேல் அது படிப்பு ஒன்றேயாம். அவளுக்கு எவ்வெப்பொழுது ஓய்வு கிடைத்ததோ அவ்வப்பொழுது தாய்க்குத் தெரியாத ஓர் தனி யறைக்குச் சென்று தனக்கு கல்யாண மாகு முன்பு தந்தையின் பெருமதியால் கொடுக்கப் பெற்ற நூற்களை மீண்டும் மீண்டும் படித்து வந்தாள். அவ் வாறு நன்கு படிக்கப்பட்ட நூற்களில் நைடதமும் ஒன்று. அதனை அவள் ஆதிமுத லந்தம் வரையிலும் நெட்டுருப்போட்டிருந்தாள். எந்த இரவில் எத்தனை மணிக்குத் தட்டி எழுப்பிக் கேட்டாலும் அதிலுள்ள செய்யுட்களை நூற்றுக்கணக்காக ஒப்புவிக்கு மாற்றலி ருந்தது. அவள் நைடதத்தை படிக்கும்போதெல்லாம் தனது பரிதாபகரமான நிலையை உன்னுவதுண்டு. தன்னை நளனை பிரிந்த தமயந்தியோடு ஒப்பிடுவாள்.

இத்தகைய உணர்ச்சி வரத்தொடங்கிய நாள் முதல் அவளுக்கு வைதவ்யம் ஓர் பெருங் கொடுமை யாகவும் நீக்க முடியாத சனியாகவும் தோற்றியது. ஏன் புருஷர்கள் விதவைகளாயிராமல் ஸ்திரீகளை மட் டிலும் விதவைகளாய் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணம் அவள் மனதில் உதயமாகி அது வளர்ந்து கிளை விட்டு, தழை பரப்பி, பூத்து நிற்கத் தொடங்

கிற்று. அக்காலங்களில் அவளுக்குஆடவரைக்காண்ப தும், அவர்களைப்பற்றிப் பேசுவதும் அதனைச் சிந்திப் பதும், ஓர்வித இன்பத்தைக் கொடுத்தது. இவ் வண்ணம் மனம் மாற்றமடைந்துகொண்டே வரும் நாளில் அவள் கண்களில் தியாகராஜன் என்ற இளைஞ னின் அரியசெயல்கள் விழுந்தன.

தியாகராஜன் என்பவர் பள்ளத்தூரிலேயே உள்ள ஒரு தொன்மையான பிரபல குடும்பத்தில் வந்தவர். அவருக்கு போதிய அறிவும் ஆற்றலும் அமைந்திருந்ததோடு பெண்கள் விழையும் நலன்கள் பலவும் செறிந்து மிருந்தன. அவரது அழகிய முக மும், அமைந்ததோற்றமும், அகன்றமார்பும், ஆழ்ந்த பார்வையும் எந்தப் பெண்ணையும் மயக்கும் வன்மை பெற்றிருந்தன. சாண்டோ சோமசுந்தரனார் உடற் பயிற்சிச் சாலையின் ஒரு உறுப்பினராயிருந்த அவர் தேகப்பயிற்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வந்தார். எனவே அவரது உடலில் செழுமையும் இளமையும், பொன்மையும் எழிலும் விளையாடிக் கொண்டிருந் தன.

தியாகராஜன் நல்ல உடற்கட்டும் அழகும் பெற் றிருந்தது போலவே, போதுமான கல்வி யறிவும் பெ ற்றிருந்தார். அவர் நம்கதை நடக்கின்ற போழ்து திருச்சியில் B. A. ஜூனியரில் வாசித்து கொண்டிருந் தார் என்பதை வாசகர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பள்ளத்தூர் செட்டியார்களில் உயர்தரக் கல்வி கற்றவர் இவர் ஒருவரே யாவர். இவருக்கு சுமார் 10 லட்சத்துக்கு ஆஸ்தியுண்டென

றும் சொல்லப்படுகிறது. ஆஸ்தியும் படிப்பும் ஒருங்கு சேரவே அவருக்கு காரைக்குடி, தேவகோட்டை, செட்டிநாடு, கொத்தமங்கலம் கோனாப்பட்டு, கீழச்சிவற்பட்டி முதலிய பலவிடங்களிலிருந்து தொகை தொகையாகப் பெண்வீட்டார் வந்தனர். பல ராவ்பகதூர்களும், திவான்பகதூர்களும் பிறரும் சிபார்சுக்கும் வந்தார்கள். ஆனால் தியாகராஜன் வந்த வந்தவர்கட்கெல்லாம் புன்னகை தவழ்ந்த இனிய முகத்தோடு முகமன்கூறி அழகான சமாதானங்களால் அனுப்பிவிட்டார்.

ஆனால் தியாகராஜனது எண்ணம் என்ன? அவர் ஓர் பெரிய சீர்திருத்தவாதி; ஓர் பெரிய பொதுஜன ஊழியர்; ஓர் சமுதாய—தேச பக்தர். அவருக்கு தமது சமுதாயத்தின் பரிதாப நிலைமையும் பரிகார மார்க்கமும் நன்கு தெரியும். பெண்கள் முன்னேற்றமும் விடுதலையுமடைந்தாலல்லது சமுதாயம் கடைத்தேறப்போவதில்லையென்று பலமாக நினைத்தார். எனவே பெண்களை சீர்திருத்துவதெப்படி என்ற எண்ணம் அவர் மனதில் குடிபுகுந்தது. அதற்காக அவர் கண்ட வழி ஒன்றே. அதாவது விதவைகட்கு மணம் செய்யுமுரிமையைக் கொடுக்கவேண்டுமென்பதாம். அவர் தம் சமுதாயத்தைப்பற்றி நினைத்தபோதெல்லாம் தமது சமுதாயம் லட்சம்லட்சமாக ஆஸ்தி படைத்திருந்துமென்ன பிரயோசனம்? எழுத்து வாசனையுள்ள பெண்கள் 10 பேரைக் காண முடியாதேயென்று ஏங்கினர். என்றாலும் தன்னாலியன்ற அளவு தொண்டு செய்வதென்று தெளிந்து அதற்கறிகுறியாக விதவையையேனும் மணம் செய்வதென்று

உறுதி கொண்டார். விதவையை மணம் செய்வ தென்பது சாதாரண விஷயமல்லவென்பது அவரு க்கு தெரியும். பல்லாயிரக்கணக்கான எதிர்ப்புகள்வரு மென்பதும் எல்லோரும் இகழ்வார்களென்பதும் ஜாதிப்ரஷ்டம் கூட செய்யமுயல்வார் களென்பதும் அவர் உணர்ந்திருந்தார். என்றாலும் சீர்திருந்தம் என்று கூறிவிட்டு செயலில் ஒன்றும் செய்யாமலிருப் பதைவிட செயலில்காட்டுவதே தமேலென்று கருதினார். எனவே என்ன தொல்லைகட்காளானாலும் ஒருவிதவை யையே மணப்பது என்ற உறுதி பிறந்தது. அது முதல் ஓர் தகுந்த விதவையை தேடலானார்.

அப்படியிருக்கும் நாளிலே, பள்ளத்தூர் வாலிபர் கள் சிலர் ஓர் சமுதாய சீர்திருத்தக் கழகமமைத்து சிவன்கோவிலுக்கு தெற்கிலுள்ள மைதானத்தில் பிர சாரம் செய்து வந்தார்கள். அக்கூட்டத்திற்கெல் லாம் தியாகராஜனும் கூட விஜயம் செய்தார். அவ ருக்கு நல்லநாவன்மையுண்டு. எவர் பேசினாலும் தியா கராஜன் பேச்சே தலை சிறந்து நிற்கும். மேடையில் ஏறினால் ஆண்களும் பெண்களும், ஆஸ்திகரும் நாஸ் திகரும், வயோதிகரும் வாலிபரும், கற்றோரும் மற் றோரும் இன்னும் பேசமாட்டாரா, இன்னும் பேச மாட்டாராவென்றே கூறி நிற்பார்கள். விஷயங்களை பசுமரத்தாணி போல் மக்களிதயத்தில் பதிக்கும் வல் லமை மிகுதியுமுண்டு. இத்தகைய நாவன்மையோடு நாம் குறிப்பிடுகின்ற பிரசார காலத்தில் தியாகராஜன் ஒருவாரம் சேர்ந்தாற் போல பெண்களுக்காகச் சொற் பொழிவு நிகழ்த்தினார். அப்போதுஎடுத்துக்கொண்ட விஷயங்கள் பெண்கள் விடுதலை, பெண்கள் நிலை, வித

வைகள் துயரம், விதவைகள் மணம் என்பனவாகும். இப்பிரசங்கங்கள் ஊருக்குள் பெரிய பரபரப்பை உண்டுபண்ணின. பற்பலர் பற்பலவாறு பேசிக் கொண்டார்கள். இளைஞர்கள் சேர்ந்து ஜாதியைக் கெடுக்கப்பார்க்கின்றார்கள் என்றார்கள் சிலர். காலம் தலைகீழாய் மாறிப்போய்விட்டது என்றார்கள் சிலர். இளைஞர்கள் முதியவர்கட்குஉபதேசம் செய்யும்காலம் வந்துவிட்டதென்றார்கள் சிலர். சமூகக்கட்டை அறுக்க நினைக்கின்றார்கள் நம் வாலிபர்கள் என்றார்கள் சில்லோர். எவர் என்ன சொன்னபோதி லும் தியாகராஜன் மனங்கோணாது தம் தொண்டை முறையே செய்துவந்தார். தினமும் பிரசங்கங் கேட்க ஜனங்களும் ஏராளமாக வரத்தொடங்கினார்கள். அவ் வாறு வந்த ஆர்வமுடைய பலபெண்மணிகளில் நமது விசாலாட்சியும் ஒருத்தியாவாள். மேற் படிப் பிரசங்கம், அவள் ஏற்கனவே கொண்டிருந்த உத்தேசத்துக்கு ஆதரவுபுரிந்து பலத்தைபளித்தது. எனவே நாம் குறிப்பிடுகின்ற இக்காலத்தில் அவ ளது விதவை உணர்ச்சி தலைகீழாய் மறிந்தது என் னலாம். அவள் நாளும் மறவாமல் கூட்டம் தொடங் கியதும்வந்துவிடுவாள். தியாகராஜன் பிரசங்கம் ஆரம் பிப்பது முதல் முடியுந்தனிலும் மிகுந்த உணர்ச்சி ததும்பிய கண்களோடு பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டேயிருப்பாள். இத்தகைய விசாலாவின் ஊக்கத்தையும் தன்மையையும் தியாகராஜன் அறியா மலில்லை. அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே கூட்டத்தில் விசாலாமிகுந்த ஆர்வத்தோடு தம்முரை களை கேட்கின்றாளென்பதை அறிந்து கொண்டார். அவரது கண்கள் பலதடவை அவள் மீது பாய்ந்தன.

சிலகால் இருவர் கண்களும் சந்தித்ததுமுண்டு. அப்போதெல்லாம் விசாலா நாணத்தால் தலைகுனிந்து நின்றது அவர் மனதில் புகைப்படம் போல் பதிந்தது. இந்த நிகழ்ச்சி நாளடைவில் இருவர் இருதயத்தையும் ஒன்றாயிணைத்தும் என்று, மறுக்க முடியாத மனக்கூட்டுறவை உண்டுபண்ணியது.

## அத்தியாயம் 3.

### இரு கடிதங்கள்.

இங்ஙனமே சில நாட்கள் செல்ல, விசாலாவுக்கு நாணத்தால் தியாகராஜனை காணவும் முடியவில்லை. சிற் சில வேளைகளில் அவசியம்பற்றி அவரிடம் பேசி வந்த பேச்சுகள்கூட எங்கேயோ பறந்துபோயின. வழியில் எங்கேனும் அவரைக்கண்டால் எழுத முடியாத நாணத்தோடு மின்போல் பாய்ந்து மறைந்துவிடுவாள். இச்செய்கையை எவரேனும் கண்டால் இருவருக்குள்ளும் ஏதோ ஒருவிதமான உணர்ச்சி நிகழ்ந்து கொண்டிருந்தது என்று யூகித்துவிடுவார்கள். நல்ல வேளையாக எவரும் காணவில்லைபோலும்! தியாகராஜன் அத்தகைய காலத்தைத் தனக்கு ஓர்வெற்றியளிக்கும் நாளென்று நினைத்தார் அதோடு அவருக்கு தம்மாசையை விசாலாவிடம் எவ்விதத்திலும் தடையின்றி தெரிவிக்கலாமென்ற தைரியமும் வந்தது.

இப்படிப்பட்ட நாளிலே, ஒருநாள் தியாகராஜன தன்மனோ நிலைமை முழுதும் விளக்கியோர் காதற் கடிதம் வரைந்து விசாலாட்சியின் கையில் சமர்ப்பித்தார். சந்துகள் நிரம்பிய பள்ளத்தூரில் வழியில் ஒருவரை சந்திக்கும்போது கூட கடிதத்தைக்

கொடுத்துவிட சௌகரியமுண்டு என்பதை நம் வாசகர்கள் உணர்ந்திருக்கலாம். ஆகவே தியாகராஜன் எப்படி கடிதத்தைக் கொடுத்தாரென்பதைப் பற்றி விரிவாயெழுதவில்லை. ஒரு நாள் மாலையில் ஒரு சந்துவழியாக விசாலாட்சி வந்துகொண்டிருக்கும் போது அவள் பின்னாடிவந்து தியாகராஜன் தயாராயெழுதிவைத்திருந்த கடிதத்தை நீட்டினார். கையில் எதையோ தருகின்றார் என்றதும் அவள் திடீரென்று வாங்கினாள். தியாகராஜன் கடிதத்தைக்கொடுத்துவிட்டு சரேலென்று கம்பி நீட்டிவிட்டார். விசாலா அதனை எவருங் காணாது சேலைக்குள் புதைத்து வைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனாள். அங்கு அதனை பிரித்துப் படித்தபோது இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

பள்ளத்தூர்.
19 மார்ச் 1929

என் அருமைக்காதலி,

நானுன்னைத் திடீரென்று காதலி என்று அழைக்கத்தொடங்கிவிட்டதற்காக அதிசயப்பட வேண்டாம். நாம் இருவரும் காதலிக்கத்தொடங்கி மாதமாறாயின. அதனை நீ ஒளிக்கமாட்டாயென்றெண்ணுகிறேன். ஒளித்தாலும் நீ என் காதலியேயென்பதனை திடமாய்க்கூறிக்கொள்கிறேன். என் மனதில் "விசாலா" வென்பது பொன்னெழுத்துக்களால் எழுதப்பட்டிருக்கின்றது. அதாவது என்னிருதயத்தில் நீ கோவில்கொண் டெழுந்தருளியிருக்கின்றாய். என் இதயம் நீயாகவேஜொலிக்கின்றது. நீயே என்னுயிராகவுமுயிருக்குயிராகவுமிருக்கின்றாய். நீ இன்றெனில் நானி

ல்லே. நீ என்னை யடைந்து வாழ வேண்டும். இன்றே னில் நான் பிணமே. இனி உன்னைப்பிரிந்து வாழேன். இக் கடிதம் என் நிணத்திஞல் எழுதப்படுகின்றதென்று எண்ணிக்கொள். என தருமை விசாலா! நீ என்னைத் தள்ளிவிடாதே—தள்ளிவிட்டால் பள்ளத் தூரிலுள்ள ஒரு தியாகராஜனை நீ கொலை செய்து விட்டாயென்று எண்ணிக்கொள்—இதைவிட நானதிகமாக எழுத வேண்டிய தேவையில்லை. இன்னும் மேலே கூற விரும்புவது—, நான் உன் மனோ நிலைமையை யறிந்துகொண்டே னென்பதாம். நீ உண்மையில் வைதவ்யத்தை வெறுக்கின்ருய்; என்பது எனக்குத் தெரியும்; நானும் அவ் வைதவ்ய மொழிய வேண்டுமென்றுதான் மனமார நினைக்கின்றேன்; வாயாரச் சொல்கின்றேன்; கையார எழுதுகின்றேன். நமது சமுதாயத்தில் வைதவ்ய மொழிந்தாலல்லாமல் நாம் சீர்திருத்தமடையப் போவதில்லை. எந்த சமுதாயத்துப் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டுக் கொடுமைப் படுத்தப்பட்டு அவதிப்படுத்தப்படுகிருர்களோ அந்த சமுதாயம் அல்லலுற்று உழலவே செய்யும். ஆதல்பற்றியே உலகப்பெரியார்களெல்லாம் பெண் விடுதலை பெண் விடுதலை யென்று கூக்குரலிடுகின்ருர்கள். பெண்கள் தான் ஒரு சமுதாயத்தின் உற்பத்திக்கும்வளர்ச்சிக்கும் கொள்கைக்கும் அழிவுக்கும் காரணமாயிருக்கின்ருர்கள். எனவே உற்பத்தி வளர்ச்சி அழிவாதியவற்றிற்கு காரண பூதராயிருக்கின்ற ஒரு சாரார் பேதைகளாய், அறிவிலிகளாய், கல்விவாசனை அற்றவர்களாயிருந்தால் அச்சமுதாயம் எக்கதியடையும்? ஆதல் பற்றியேதான் என் காதற்கனியே! நான் என்ன கொடுமை வந்தபோதிலும், என்ன இன்னல்

கள் மலை மலையாக வந்தபோதிலும் விதவையையே மணஞ் செய்யவேண்டுமென்று றுதி செய்திருக்கின்றேன். இந்த முடிவிலிருந்து எட்டுணையும் நான் விலகேன் என்பதை என்னுள்ளமாகிய உன்னிடத்தே கூறுகின்றேன்.

நான் மேற்படி முடிவோடு கடந்த மூன்று வருஷங்களாக வேலை செய்து கொண்டிருக்க உனது வனப்பு மிக்க உருவம் எங்ஙனமோ என் உள்ளத்தில் புகுந்துவிட்டது. இன்று நீ விதவா வேஷத்தில் சிறிது பாழ்பட்டுத் தோன்றினும் உன்னுடலில் எல்லா விதமான எழிலும் புதையுண்டிருக்கின்றதென்பது எனக்குத் தெரியும்.

எனவே என் காதற்கிளியே! விசாலா! நீ என்னோடு ஒத்துழைக்கவேண்டும். எனக்கு வருகின்ற எந்த இன்னலிலும் நீயும் பங்கு கொள்ளவேண்டும். நம்மைப் பலர் தூற்றினும் பிற்பால் நமக்கு சிலை நாட்டுவார்களென்பது எனக்குத் தெரியும். அத்தகைய ஓர் உணர்ச்சி நம்பிளைஞர்களுடைய இதயத்தில் முளைக்கப்போகின்றதென்பதனை நானின்று காண்கின்றேன். உலக மிருந்தபடியே இருந்து விடாது; முன்னேறிக்கொண்டுதானிருக்கும். நமது சமுதாய வெற்றியெனும் சூரியன் உதிக்கப்போகின்றான். விசாலா! சமூகச் சீர்திருத்தம் இலேசானதன்று. அது எண்ணிறந்த பகைவரையே கூவியழைக்கும். இருந்தாலும் பொருட்படுத்தவேண்டாம். நாம் அச்சீர்திருத்தத்துறையில் முதலிலிறங்கி அதனால் வரும் பரிசை முதலாவதாகப் பெறுவோம். அத்தகைய தருணத்தை இழந்து விடாதே.

என்னுருயிரே, நீ இச்சீர்திருந்தத்துறையிலிறங்குவதால் முற்றிலும் தள்ளப்பட்டுவிடுவாயென்றெண்ணவேண்டாம். நம்மிடையே நமக்கு ஓர் கட்சியிருக்கின்றது. பல விளைஞர்கள் சீர்திருத்தம் பேசித் திரிகின்றார்கள் என்பதனை நீயறிவாய். அவர்கள் நம்மைத் தள்ளிவிட்டுப்போய்விடமாட்டார்கள். போனார்களென்றால் அவர்களுடைய போலிக்கூற்று என்ன பலனுடையது என்று அறிந்துகொள்ளலாம். அவ்வாறு மாற்றுப்பார்ப்பதற்காவது நீ முனைந்து வரவேண்டும்.

தாய் தந்தையர் குறை கூறுவார்களென்பதற்கும் ஓலமிடுவார்களென்பதற்கும் அஞ்சாதே. அஞ்சினால் எக்காரியமும் சாதிக்கவியலாது. அஞ்சாதவனே உலகில் வெற்றி பெற்று விளங்குவான். அச்சத்திற்கு சீர்திருத்தம் பகையாம். உண்மையில் நீ உலகிற்கு மனித உருவமென்பதனைக்காட்ட விரும்பினால், நீ நலனுற ஆசை கொண்டால், நீ நம் சமுதாய முன்னேற்றத்தை அவாவினால் உண்மையாக உன்னுள்ளத்தில் பொங்கித் ததும்பி நிற்கும் காதலை ஒரு கால்வாய் வழி வெளிவிடவே வேண்டும். நான் அக்காதலை ஏற்றுக் கொள்கிறேன். நம்மிருவர் காதலும் தேசத்திற்கு நலம் பயக்க. நாமின்று முதல் ஒத்துழைப்போம்.

கடைசியாக, என் அன்பே! மணியே! அருமை விசாலா! நீ விரைந்து என் ஆசையைப் பூர்த்தி செய்வாயென்று எண்ணுகின்றேன். திருச்சியே நமது

உறைவிடம்; நாம் சந்திக்குமிடமுமதே; எஞ்சியன உன் வேண்டுகோளின் பின்.

இங்ஙனம்,

உனது தியாகராஜன்.

இந்த நீண்ட, உருக்கமான, பொருள் செறிந்த, துணிகரமான கடிதத்தைப் படித்து முடிந்ததும், விசாலா தான் இந்த உலகிலிருக்கின்றாளா அல்லது வேறு எந்த உலகிற்கேனும் எடுத்துச் செல்லப்படுகின்றாளா என்று புரியாது தத்தளித்தாள்; விழித்தாள்; யோசித்துப் பார்த்தாள். அவளது மூளை வெறும் வெளியாகத்தோன்றிற்று. எதை நினைத்தும் ஒன்றும் புரியவில்லை. கடிதத்தைப் பலதடவை வாசித்தாள். என்ன செய்வது, என்ன சொல்வது, என்று ஒன்றுமே புரியவில்லை. சுருங்கச் சொன்னால் அக்கடிதத்திலீடுபட்டு செயலற்று விழித்தாள் என்னலாம்.

பத்து நாட்கள் கடந்தன. தியாகராஜன் நடு வேனிற் கால விடுமுறைக்காக வந்திருந்ததால் அவர் பள்ளத்தூரிலேயே இருந்துவந்தார். அவரை வெளியே எங்கேனும் காணக்கூடுமோவென்றஞ்சி விசாலா அவர் வந்தது முதல் வெளியே இறங்குவதை மிக மிகக் குறைத்துவிட்டாள். வீட்டுக்குள்ளிருக்கும் போது அவளுக்கு ஏதோ ஒரு பொருளை இழந்துவிட்டாற் போல தோன்றிற்று. இழந்த பொருள் எது, எங்கு விழுந்தது என்பது புலப்படவில்லை. தியாகராஜனின் திருவுருவம் அவள் அகக்கண்ணில் நடனமாடியது. அவரது பேச்சுவன்மையும், அழ

கிய தோற்றமும் அவளுடைய உயிருக்குயிராக விளங் கின. தனியிடத்தை நாடிய பொழுதெல்லாம் அவ ற்றைப்பார்த்துப்பார்த்து இன்புற்றாள். அப்பொழுது அவள் அடைந்த ஆனந்தத்தை நாமெழுதப் புகவில்லை. சுருங்கச் சொன்னால் அவளுக்கு ஆனந்த மிகுதியால் தியாகராஜனென்ற உருவம் ஓர் தேஜோ மயமான திவ்ய வொளிபோன்று தோன்றிற்று, நாள டைவில் அதில் ஒருவிதமான பக்தியும் எல்லை கடந்த விசுவாசமும் உதயமாயின. அவ்வுருவம் தன்மீதுக் கோபித்துக் கொள்ளுமோ, அல்லது தன்னைவெறுத் தள்ளிவிடுமோ, அல்லது தன்னை கண்டித்துவிடுமோ வென்றஞ்சினாள்.

இந்த நிலைமையிலிருக்கின்ற ஒரு பெண் தன் காதலன் கொடுத்த கடிதத்தைப் பெற்றுவிட்டு சும் மா விருப்பாளா? இருந்தால் ஒரு கணமாவது மனம் சாந்தியை நல்குமா? இளங்காதலர்கட்கு தம் துணைவர் களை நினைப்பதும், கனவு காண்பதும், காதற்கடிதம் எழுதுவது மன்றோ ஆறுதலளிக்கு மார்க்கம்? என வே விசாலா ஒரு நாள் ஓர் கடிதத்தைத் தீட்டினாள். அதனை தந்தை விஸ்வநாதன் செட்டியார் தபாலனுப் பிய போது (கூட்டத்தோடு கூட்டமாய்) வேலைக்கா ரன் வழியாக அனுப்பி விட்டாள். தியாகராஜன் உரிய காலத்தில் அதனை பெற்றார். அக்கடிதத்தில் அடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

பள்ளத்தூர்
29 மார்ச் 1929

அன்புடையீர்!

நற்குண நற்செய்கை வாய்ந்தவரும் கல்வியாலும்

நாவன்மையாலும் நலன் பெற்றிருக்கின்ற வருமாகிய தாங்கள், நிர்பாக்கிய வதியான எனக்கு ஓர் கடிதம் எழுதப் புகுந்தமையைக் கண்டு வியப்புறுகின்றேன். நான் ஓர் அநாதை; நீங்கள் ஓர் கனவான். நான் ஓர் ஒடுக்கப்பட்ட பேதைப் பெண்; நீங்கள் ஓர் சபையச் சையான புருஷர். நான் சுடுகாட்டை நாடவேண்டிய ஒரு அபலை; நீங்கள் உலகை உய்விக்க வேண்டிய ஓர் ஆண் மகன். தங்கள் அரியசெயலையும் பெரிய ஊழியத்தையும் தங்கள் குடும்பத்தாரும் நம் சமுதாயத்தாரும் வேண்டுகின்றார்கள்; ஆனால் அவர்கள் என்னை இவ்வுலகத்தைவிட்டு ஒழிக்க முயலுகின்றார்கள். இவ்வாறுமலைக்கும் மடுவுக்கு முள்ள வித்தியாசம் நம்மிரு வருக்குள்ளு மேற்பட்டிருக்கும்போது நாம் ஒன்று சேர விழைவது நேர்மையுடையதா? தங்களுடைய சுற்றந்தாரெல்லாம் தாங்கள் ஓர் உயரிய நல்லாளை மணந்து அன்புற்று வாழ்வதைக் காணப் பெரிதும் அவாவி நிற்கின்றார்கள். நானும், தாங்கள் மணத்தினால் சிறந்து நந்தா விளக்காய் ஜோதிபரப்பி ஒளிர்ந்து நிற்பதையே காண விரும்புகின்றேன். இத்தகைய நிலையிலிருக்கும் நீங்கள் வெறும் விதவையாகிய எனக்கு ஓர் காதற் கடிதம் விடுப்பதென்றால் அதனை என்னென்று கூறுவேன்?

நான் உங்களை பெரிதாக மதித்தது உண்மை; இப்பொழுதும் மதிக்கவே செய்கின்றேன். அம் மதிப்பு முழுதும் ஒரு சகோதரனென்ற முறைபற்றியே முளைத்து, வளர்ந்து, செழித்துக்கொண்டிருக்கின்றது.

தங்கள் கடிதத்தைக்கண்டதும் தங்கள் உண்மையான எண்ணந்தான் வெளிவருகின்றதா; அன்றி வேறு கருத்துப்பற்றி எழுதுகின்றீர்களாவென்று சந்தேகித்தேன். ஆனால் உண்மை எதுவோ? இன்று முதல் நீங்கள் என்னை தங்கள் சகோதரியைப்போல் எண்ணுங்கள்; என்னை மணஞ்செய்யவேண்டுமென்று எண்ணவேண்டாம் அப்படி செய்வது பகற்கனவாகவே முடியும். இனி நமக்குள் கடிதப்போக்குவரத்துத்தேவையில்லை. வணக்கம்.

இங்ஙனம்,
நிர்ப்பாக்கியவதியான,
விசாலாட்சி.

இக்கடிதத்தைப் பார்த்தால் தியாகராஜன் மனம் எப்படியிருக்கும்? பன்னெடுநாட்களாய் அவளுக்காக பட்டபாடு முழுதும் பாழாய்ப்போய்விடுமன்றோ? அளவு கடந்த நம்பிக்கையோடிருப்பவர்கள் அந்நம்பிக்கை திடீரென்று முறிந்துவிடுவதைக் கண்டால், உயிரை மாய்த்துக்கொண்டாலும் கொள்வார்களல்லவா? நாம் தியாகராஜன் எப்படியிருக்கின்றாரென்று பார்ப்போம்.

தியாகராஜன் கடிதத்தை வாசித்ததும் சிறிது மாற்றமடைந்த முகத்தோடு கொஞ்ச நேரம் யோசித்தார். அப்பால் மீண்டும் அதனை வாசித்தார். வாக்கியம் வாக்கியமாக, பதம் பதமாக அவரது கண்கள் அலசிப்பார்த்தன. பின்பு, தனக்குள் இவ்வாறு சொல்லலானார் "ஆப். இது ஒரு காதற்கடிதமே. காதற்கடிதமென்பதற்குச் சந்தேகமில்லை. விசாலா

என்னைக் காதலிக்கின்றாள்...............இல்லையென்றால் ஏன் என் கடிதத்திற்குப் பதில் எழுதவேண்டும்? கடிதம் கிடைத்தவுடன் அடுப்பில் போட்டு எரித்திருக்கலாமன்றோ? இல்லையென்றால் தந்தையிடம் கொடுத்து எனக்கு என்றும் நீங்கா அவமானத்தை யுண்டுபண்ணியிருக்கலாமே? என் ஆசை விசாலா, அப்படியொன்றும் செய்யவில்லை. என் கடிதத்தைப் பெற்று நன்றாய் படித்து அதற்கு பதிலெழுதியிருக்கின்றாள். ஆ! எவ்வளவு சிரமப்பட்டாளோ? தாயோ, வேலைக்காரியோ, விஸ்வநாதனோ விசாலாவின் கையில் ஒரு காகிதத்துண்டேனுமிருப்பதைக் கண்டிருந்தால் என் செய்திருப்பார்கள்! அப்படியிருந்தும் விசாலா ஓர் கடிதமெழுதி தந்திரமாக எனக்கனுப்பிவிட்டாளென்றால் அவள் எவ்வளவு பலமான காதலால் தூண்டப்பட்டிருக்கவேண்டும்?...............ஆம். அவள் என்னைக் காதலிக்கின்றாளென்பது உறுதிதான். ஆனாலும் பயப்படுகின்றாள். பயமே அவளை இத்தகைய ஓர் கடிதமெழுதத் தூண்டியிருக்கின்றது...........அதோடு விசாலா என் நலத்தைப் பெரிதும் அவாவுகின்றாள். அம்மட்டோ? அவளுடைய பரிதாப நிலைமையைக் கண்டு மனஞ்சலிப்புறவும் செய்கின்றாள். விதவையான அவளை நான் மணந்தால் என் ஜீவிதம் பாழ்பட்டுவிடுமென்று அஞ்சுகின்றாள் போலும். இத்தகைய நல்லெண்ணம் அவளுடைய மனத்தில் உதிக்கவேண்டுமென்றால் என்னிடம் எவ்வளவு காதல் வைத்திருக்கவேண்டும்? ...........அவள் என் நிலைமையையும் அவளது வாழ்க்கையையும் ஒப்பிடுவதைக் காண்க. அவளைப்பற்றிக் கூறுகின்ற ஒவ்வொரு பதமும் மனதிலிருந்தன்றோ

எழும்பியிருக்கின்றன?........மேலும் அவளிடமுள்ள என் காதல் உறுதியுடைய தன்றென்று அஞ்சுகின்ருள் போல் தோற்றுகிறது. ஆதல் பற்றியே "தங்கள் உண்மையான எண்ணந்தான் வெளிப்படுகின்றதா; அன்றி வேறுகருத்துப்பற்றி எழுதுகின்றீர்களா வென்று சந்தேகிக்கின்றேன்" என்று குறிப்பிடுகின்ருள். ..........நல்லது இன்னும் ஆராய்ந்துபார்க்கின் அவள் என்னைக் காதலிக்கின்ருளென்பதற்கு வேறு சான்றுகளுமிருக்கின்றன. "இன்று முதல் நீங்கள் என்னை சகோதரியாக எண்ணுங்கள்" என்று கூறுகின்ருளன்ருே! என்னை காதலிக்கவில்லையென்ருல் ஏன் இனி மேலும் சகோதரியாக நினைக்கும்படி வேண்டுகிருள்? மனதில் ஈரமில்லாமற்போனுல் தங்களுக்கு எதிரி என்றெண்ணுங்களென்றன்ருே எழுதவேண்டும்? ...........தவிரவும் அவள் இத்தனை நாளும் என்னை சகோதரனுக நினைத்துவந்ததாகக் கூறுகின்ருள். அது சுத்தப்பொய்யானதாம். சகோதரனுக நினைத்துவந்தாளென்ருல் ஏன் என்னைக் காணும் போதெல்லாம் நாணங்கொண்டு முகத்தைத் தாழ்த்துகின்ருள்? ஏன் ஓடி யொளிக்கின்ருள்? ஏன் முகம் வேற்றுமைப்படுகின்றது?...........இல்லை—இது ஒரு காதற்கடிதமே. அவள் எங்கள் சேர்க்கை சாத்தியப்படுமாவென்று அஞ்சியே இத்தகைய ஓர் கடிதமெழுதியிருக்கின்ருள். அன்றி என்மீதுள்ள காதலுக்கு எட்டுணையும் பங்கமில்லை...........நான் அவளை நேரில் பார்த்து என்மனே நிலைமையை தெரிவித்துக் கொள்வேன்...........உண்மையாகவும் விசாலா எனக்கே சொந்தமாவாள். உறுதி."

இவ்வாறு தியாகராஜன் நினைத்துத் தனக்குள் உறுதி செய்து சுமார் ஆறுமாதமான பிறகுதான் நாம் முதலாவது அத்தியாயத்தில் விவரித்த சம்பவம் நிகழ்ந்தது.

## அத்தியாயம் 4.

### இரண்டறக் கலத்தல்.

நாம் முதலாவது அத்தியாயத்தின் கடைசியில் விசாலாட்சி தனது சுமங்கிலியுடையோடு திரும்பிப் பார்த்ததும் தியாகராஜன் அவளுடைய ஒய்யாரத்தோற்றத்தைப் பருகிக்கொண்டிருக்கக் கண்டாள் என்று கூறினோம். விசாலாட்சி தியாகராஜனைப் பார்த்ததும் எவ்வாறு தத்தளித்திருப்பாளென்பதை முந்திய அத்தியாயங்களைப் படித்த நண்பர்கட்குக் கூற வேண்டிய தேவையில்லை. அவள் தனது மானம் முழுவதும் குப்பென்று காற்றில் பறந்துபோய்விட்டதாக வெண்ணினாள். ஒரு பெண்ணை புனிதமானவள் என்று மதிக்க வேண்டிய ஒருவர் அவளை "தகாத வேலை செய்துகொண்டிருப்பதாக"க் கண்டால் அவர்தான் எவ்வாறு நினைப்பார்? சுமார் 15 நிமிஷ நேரம் அவளுக்குயிரில்லை. அவள் சாவதா, உயிர் வாழ்வதா வென்பது தெரியாமல் செயலற்று உளம் மாழ்கியிருந்தாள். அப்பால் சிறிது பிரக்ஞை வந்ததும் தன் முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு பக்கத்தில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்தாள்.

தியாகராஜன் சமீபத்தில் சென்று அவளுடைய வளையணிந்த அழகிய கையை முகத்திலிருந்து அகற்ற முயன்றுகொண்டே 'விசாலா! எனதருமை விசாலா!

என் உயிரனைய விசாலா! நீ ஏன் இன்னும் வெட்கிக் கின்றாய்? நான் எந்த வுருவத்தை விழைந்தேனோ, நீ எந்த உருவத்தை எனக்குக் காட்டக் கடமைப் பட்டிருக்கின்றாயோ அந்த வுருவத்தையே என் முன் காட்டுகின்றாய். ஆ! எவ்வளவு நாள் நான் தவித்தி ருந்தேன்! என் கோமள ரூபியே! என்னென்று கூறுவேன் நினது தேன்துளிக்கும் புனிதமேனியை? அப் பொன் மேனியை, புனித மேனியை எவ்வாறு பாழ்படுத்திவிட்டனர் தாய் தந்தையரென்னும் சண் டாளர்கள்? பொல்லாத வெள்ளை துகிலை போர்த்து நினது அழகு முழுதையும் மறைத்து விட்டனரே. விதிகெட்ட தேசம்! மக்களை அதிலும் காதல் புரியு மரம்பையர் போலிளம் மங்கையரை இன்பமனுபவிக்க விடுவதில்லை............ஆ! விசாலா! நின்னெழிலே எழில்; நின் வனப்பே வனப்பு; நின்னை நோக்கி இன்புற்ற இந்நாளே நன்னாள். ஆ! என் பூந் தேனே! பூம் பொழிலே! நீ ஏன் முகத்தை மறைக்கின்றாய்? நின் முகார விந்தத்தைக் கடைக் கண்ணால் பருக நினைக் கும் எனக்கு அதனை மறைப்பாயெனில் என்னுள் ளம் எவ்வாறு கொதிக்கும்! விசாலா கையை யெடு த்து எனக்கு மீண்டுமோர் தரிசனம் அளிப்பாய்........ ........" என்று கூறிக்கொண்டே கைகளைப்பற்றி மெதுவாக இழுக்கப் பார்த்தார். விசாலா வாயைத் திறக்கவேயில்லை. தியாகராஜன் மேலும் கையை யகற்ற முயன்றவனாகி "விசாலா! என் பொன்னே! பொற்குயிலே! நீ கையை யெடு: என்னை எத்தனை மணி நேரம் சோதிக்கப் போகின்றாய்? நீ சோதனை பார்க்கத் தகுந்த அவ்வளவு திண்ணியதன்று என் னுள்ளம். கொடுந் துப்பாக்கிக்கும், கூரிய வாளுக்கும்

அஞ்சாத எனது இருதயம் நினது முகமாகிய சந்திர னைக்கண்டதும் சந்திர காந்தம்போல் உருகுகின்றது. இன்னும் சிறிது நேரம் என்னை வருத்துவையேல் சந் திரகாந்தம் முழுதும் தண்ணீரிலேயே அமிழ்ந்து போம். என் தண்ணளியே! கையைச் சிறிது எடுத் திடுவாய்......................(சிறிது அப்பாலிழுத்துவிட்டு) விசாலா! நான்...........இதோ...........பலமாக இழு.... ..................இதோ உன் கை நோகப் போகின்றது. கையையெடு. நாணுமல் என் முகத்தைப் பார். உனது அடிமையாக விருக்கும் பாக்கியம் பெற்ற இவ் வேழையை ஏன் நோக்குகின்ருயில்லை? அடிமையைக் கண்டு எவரேனும் நாணுவரோ?" என்று கூறிக் கொண்டே இழுத்துக் கைகளை அப்பால் நீக்கினுன். எனினும் விசாலா கண்களைத் திறக்கவில்லை. முகம் நாணத்தால் விளறியிருந்தது. சுமார் 20 நிமிஷமாக பட்டாடையுள் புதைபுண்டிருந்ததாலும் மனம் திடீ ரென்று மாற்றமடைந்துவிட்டதாலும் முகத்தில் வியர் வைத் துளிகள் அரும்பியிருந்தன. அவற்றை தியா கராஜன் தனது பட்டு அங்கவஸ்திரத்தினுல் மெதுவா கத் துடைத்தான். அதோடு ஓர் முத்தமு மீந்தான். அப்போது விசாலா அடைந்த மெய்மாற்றத்தை நேரில் பார்க்கவே வேண்டும். அவளது பாதம் முதல் உச்சி வரையிலுமிருந்த ஒவ்வொரு அங்கமும் கூசின; மயிர் குச்செறிந்தது. "நான் எவ்வளவோ நாட்களாக ஒளி ந்து ஒளிந்திருந்தும் அவனது கையில் சிக்கிக்கொண் டேனே" என்று எண்ணினுள்.

நமது அழகிய விசாலாவின் நிலைமை இது வாக தியாகராஜன் எப்படியிருந்தானென்பதனைப்

பார்ப்போம். அவர் கொஞ்ச நேரம் தான் எந்த உலகிலிருக்கின்றாரென்பதையே மறந்துவிட்டார். ராஜாதிராஜர்களும் மன்னாதி மன்னர்களு மடையமுடியாதவோர் பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்கிவிட்டாற் போல எண்ணினார். தான் ஆறு மாதமாக நினைத்த —தவமிருந்த—அரிய பொக்கிஷத்தை இவ்வளவு சுலபமாக எட்டிவிட்டதை எண்ணவெண்ண ஆனந்த மேலிட்டது.

அப்போது விசாலா திடீரென்று எழுந்து "தியாகராஜா! இது உனக்குத் தகுதியல்ல; பெண்பாலார் தெரியாத்தனமாக எதுவேனும் செய்துவிட்டார்களென்றால் அதனையோர் தருணமாகக்கொண்டு இவ்வாறு செய்வது ஆண்மையன்று. நீ என்னைவிட்டு வெளியே போய்விடு" என்று கடுகடுப்பான முகத்துடன் மொழிந்தாள்.

தியாக:—நீ எனக்கு ஆண்மையின்றென்று கூறியது முற்றிலுமுண்மையே. மெய்யாகப் பார்க்கில் நான் பிணமாகவே இருக்கின்றேன். உனக்கு அடிமைப்பட்ட பின்னர் எனக்கெங்கு ஆண்மையிருக்கும்?

விசாலா:—நான், நினது இலக்கிய ஞானத்தைச் சோதிக்கவில்லை. தயவு செய்து நடந்த விஷயத்தை எவருக்கும் கூறாமல் என்னை மன்னித்துவிட்டு, நீ செல்வதில் என்ன ஆக்ஷேபணை?

தியாக:—நானுனக்கு அடிமைப்பட்டிருக்கும்போது ஏன் போகவேண்டும்? என் எஜமானி எங்கிருக்கின்றாளோ அங்கிருப்பதன்றோ முறை?

விசாலா :—இது தகுதியுடைமையன்று. ஒரு பெண் பேதையிடம்—அதிலும் என்போன்ற ஒரு விதவையிடம்—படிப்பின் திறத்தைக் காட்டுவது ஒழுங்காகாது.

தியா :—எனக்கேது ஒழுங்கு? புத்தியையெல்லாம் உன்னிடம் பணயம் வைத்திருக்கும்போது நான் ஒழுங்கற்றவனே யென்பதற்கு என்ன சந்தேகம்?

இத்தகைய சாதுர்யமான பேச்சைக் கேட்டதும் விசாலாவின் உண்மை மனப்பான்மை வெளிப்பட்டது. அவள் "தியாகராஜா! நான் ஓர் விதவையென்பதும், நான் வாழும் நாட்கள் சிலவேயென்பதும், அக்காலம் முழுதும் மானத்தோடு வாழ்நாளைப் போக்க வேண்டுமென்பதும் நீயறியாததன்று. நான் ஒரு தவறு செய்துவிட்டபோதிலும் அதில் நின்றும் திருத்தும் கடமை நினதாயிருக்க என்னை நீ நாடி நிற்பது ......................"

தியா :—எனதருமை விசாலா! நீயொரு தவறுதலும் செய்யவில்லை. நீ விதவையன்று. விதவையாகவிருக்கவேண்டிய தேவையுமில்லை. அதற்காகவே தான் இங்கு நான் வந்திருக்கின்றேன்.

விசாலா :—என் தாய்தந்தையருக்கு ஒரு குழந்தையாகிய நான் எவ்வளவு நல்லவளாயிருத்தல்வேண்டும்? சிறிதேனும் வேறுமாறாக நடப்பேனேயாயின் என் தந்தையார் எவ்வாறு உளமுடைவர்? பெற்ற பெண் தாய்தந்தையரை வருத்துவதோ கைம்மாறு?

தியாக:—நாம் உன் தந்தையார் உளமுடைவதையும், நமது சமுதாயத்தின் உயிர்நாடிகள் உளமுடைவதையும் தடைசெய்வதற்கன்றோ பாடுபடக் கங்கணம் கட்டுகின்றோம்? அதனை மீறி நின் தந்தை கவல்கின்றாரென்றால் என் செய்வது? கொஞ்ச நாள் அவர் வருத்தமடையக்கூடும். அப்பால் எல்லாம் சரியாகிவிடுவார்.

என்று கூறித் தன் கடிதத்திலுள்ள விஷயங்களை ஞாபக மூட்டினான்.

விசாலா:—நான் தங்கள் கடிதத்திற்குப் பதிலெழுதி மறுத்து விட்டேனன்றோ?

திரு:—விசாலா! நீ எழுதியது மறுப்பன்று; உடன் பாடே. நான் அக்கடிதத்தைக் கண்டதும் உன் சாதுரியத்தைக் கண்டு திகிலடைந்து விட்டேன். அக்கடிதம் நான் உன்னை அடைந்து விடுவேன் என்பதை வலியுறுத்துகிறது. எனது காதல் சரித்திரத்தின் ஜீவனாடி அக்கடிதமேயாம். அதுவே எனக்கு இங்கு தோற்றுவதற்கான ஊக்கத்தை யளித்தது.

இங்ஙனம் இருவரும் பேசிக்கொண்டே அங்கிருந்த ஓர் 'ஸ்பிரிங்' கட்டிலில் கிடந்த வெல்வெட் மெத்தையில் போயுட்கார்ந்தார்கள். அவர்களுடைய அழகிய, தகுதியான உருவங்கள் நான்கு சுவர்களிலும் சீலிங்கிலும் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடிகளில் பிரதிபிம்பித்தன. இருவரும் தத்தம் உருவங்களைக் கண்டு தாம் தாம் அடைந்த ஜோடியின் தகுதியை உன்னி மகிழ்ந்தார்கள்; எனினும் விசாலாவுக்கு தன்னுருவம்

நாணத்தை யளிக்காமலிருக்கவில்லை. அப்போது அவள் தன் காதலனை நோக்கி "நான் வாயிலை மூடிவிட்டேனே; எப்படி உள்ளே நுழைந்தீர்கள்?" என்று வினவினாள்.

தியாக :—நீ ஆதியில் தாழிடாது தானே மூடியிருந்தாய். அப்போது நான் திறந்துகொண்டு உள்ளே வந்தேன். உன்னிடம் கடைசித் தடவையாகப்பேசி விட்டுப்போக வேண்டுமென்பதே என் வருகையின் நோக்கம். நான் உள்ளே நுழைந்த சிறிது நேரத்திற்குள்ளெல்லாம் நீ கீழேவந்து வாயிலை மூடினாய். அப்பால் யாராவது நிற்கின்றார்களா வென்று அங்குமிங்கும் பார்த்தாய். அப்போது நான் ஓர் பக்கஅறைக்குள் பதுங்கி நின்றுவிட்டேன். நமது வீடுகளில் திருடனுக்குக்கூட பலநாள் தங்கிஇருக்க இடம் கட்டி வைத்திருக்கின்றோமல்லவா?

விசாலா :—இப்படித் தாராளமாக வீட்டுக்குள் வந்தீர்களே; என் தாய் தந்தையரிருந்தால் என்ன நேரிடும்?

தியாக :—ஒன்றும் நேரிடாது; நான் அவர்களிங்கில்லை என்பதையறிந்தே தான் வந்தேன்.

விசாலா :—தங்களை ஏற்றுக் கொள்வேனென்பதை எப்படிக் கண்டு கொண்டீர்கள்.

தியாக :—இதோபார் உனது கடிதத்தை.

என்று கூறிக்கொண்டு கடிதத்தை எடுத்துக் காட்டினார். விசாலா "பொக்கென்று" பிடுங்கிக்

கொண்டு "நான் இக்கடிதத்தை தரமாட்டேன். இத்தகைய ஒரு கடிதம் என்மானத்தைக் கொலை செய்வதாகும். இதுவன்றோ தின்னை என்பாலிழுத்தது. இது எவருடைய கையிலேனும் கிடைத்துவிட்டால் என்ன நினைப்பார்கள்? நானுயிருடனிருக்கவும் இயலுமா?"

என்று மொழிந்த வண்ணம் தானுட்கார்ந்திருந்த மெத்தைக்குள் செருகி வைத்தாள். இதனைக் கண்ட தியாக:—விசாலா! கடிதமா ஒரு பெரிய விஷயம்; எனது உடல் பொருளாவி மூன்றையுமே உனக்கு தத்தம் செய்துவிடுவேனே" பின் சிறிது நேரம் இருவரும் மௌனமாயிருந்த பின்னர் விசாலாட்சி "என் அன்பே, தங்களுடைய எதிர் கால வாழ்க்கையின் சித்திரம் எப்படி?"

தியாக:—நம் எதிர் கால வாழ்க்கை சமுதாயத் தொண்டு. ஒவ்வொரு கணத்தையும சமுதாய முன்னேற்றத்திற்காகவே செலவிடுவோம். நான் கடிதத்தில் குறிப்பிட்டது போல நமக்கு அருந்துணையாய் நிற்பவர்கள் அநேகருண்டு. அவர்களுடைய உதவியைப் பெற்று ஊழியம் புரிவோம். வருகின்ற இன்னலையெல்லாம் ஏற்றுக் கொள்ளுவோம். இதுவே எனது எதிர் கால வாழ்க்கையின் சித்திரம். ஒருக்கால் எல்லோராலும் நாம் தள்ளப்பட்டு, எள்ளப்படுவோமானால் திருச்சியிலிருக்கும் எனது பங்களாவே நம்முறைவிடமாகும். தேசத்தில் நமக்கு துணைபுரிவார் பல்லாயிரவர் இருக்கின்றனர். ஏழைக் குடிசைகளில் நம்மிந்திய சகோதரர்கள் ஆதரிப்பா

ாற்றுத்தவிக்கிறார்கள். அவர்கட்கு நாமுதவி புரிவோம்.

இவ்வண்ணமிருவரும் நயமாகப் பேசிக் கொண்டே யிருக்க, இருவர் உதடுகளும் ஒன்றின. இன்பம் கனிந்து ஊற்றெடுத்துப் பாய்ந்தொழுகுமாறு பல தரம் முத்தமீந்தனர். அப்போது சிவபூஜை வேளையில் கரடி புகுந்தாற் போல "விசாலா! விசாலா! என்று விஸ்வநாதன் செட்டியார் கூப்பிடுகின்ற சத்தம் கேட்டது. எவ்வளவு நேரமாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்தாரென்பது தெரியாது.

அந்தச் சத்தத்தைக் கேட்டதும் தியாகராஜன் திடுக்கிட்டு ஒரே யோட்டமாக வோடி மறைந்தான். விசாலாட்சி தனது சுமங்கிலி வேஷத்தைக் கலைக்க முயன்றாள்.

## அத்தியாயம் 5.

### புதல்வியும் பெற்றோரும்.

காதலென்பது ஓர் இயற்கை உணர்ச்சி. அவ்வுணர்ச்சி தகுந்த பருவத்தில் எந்த இருதயத்திலும் முளைத்தெழும்பவே செய்யும். அதற்கு விதவை யென்றோ, சுமங்கலி யென்றோ, மாணவி யென்றோ சொல்லப்படுகின்ற வித்தியாச மெதுவுமில்லை. சமுதாயச் சட்டத்தாலும் தாய் தந்தையருடைய வற்புறுத்தலாலும் அதனை கட்டுப்படுத்திவிடவும் முடியாது. இயற்கையை எவராலும் அடக்கியழித்துவிட முடியாதன்றோ?

எனவே இயல்பாகவே இளைஞரிதயத்தில் பொங்கித்ததும்பித் துளும்பி எழும்புகின்ற உணர்ச்சியைத்தீர்க்கமுயலவேண்டுவது பெற்றோர் கடனாகும். அதற்கு மாறாக சமுதாயச் சட்டத்திற்காவது, ஜாதிகட்டுக்காவது பயந்து அல்லது இணங்கி சட்டம் வகுக்க முயல்கின்றவர்கள் உண்மையாகவே தம்முயற்சியில் தோல்வியே அடைவார்கள். ஆதல்பற்றியேதான் உலக மேதாவிகள் விதவைகட்கு மறுமண வுரிமையளிக்க, மறுமணவுரிமையளிக்க வென்று எச்சரிக்கின்றார்கள். ஒருபுருஷன் எத்தனைமனைவியை இழந்தாலும் மீண்டும் மீண்டும் புதுப்புது மனைவியரை கல்யாணம் செய்ய விழையும் போது பெண்களை விதவைகளாயிருங்களென்று கூறினால் அதில் எட்டுணையாவது ஒழுங்கிருக்கின்றதா? புருஷனுக்கிருக்கும் உணர்ச்சியும் ஆசையும் போலவன்றோ பெண்களுக்கும் உணர்ச்சியும் ஆசையுமிருக்கும்? இதுநிற்க, இரக்கமென்கின்ற ஒன்றையெண்ணினாலாவது பெண்களை விதவைகளாய் வைத்து சித்திரவதை செய்ய மனம் வருமா? நமது நாட்டில் எத்தனை விதவைகள் ஒழுக்கம் தவறி அவமானமடைகின்றார்கள்? எத்தனை கொலைகளும் தற்கொலைகளும் நடைபெறுகின்றன? எத்தனை குடும்பங்கள் அவமானம் அடைகின்றன? இவற்றையெல்லாம் பெண்களுக்கு மறுமண உரிமையளிப்பதன் மூலம் வேரறுக்க முடியுமென்றால் நாம் ஏன் அச்செய்கையை நடைமுறையில் காட்டக்கூடாது? நாம் இதனை வற்புறுத்தவும், உண்மையில் இள மங்கையரின் மனோ நிலை—ஆசை—எதுவாகவிருக்கின்றது என்பதனை விளக்கவுமே விசாலாட்சியின் சரித்திரத்தைக் கூறுகின்றோம்.

திருமயம் சென்றிருந்த விசாலாட்சியின் தாய்தந்தையர் சுமார் 6 மணிக்குத் திரும்பி வந்தனர். அப்போது வீட்டின் முன் வாயில் உள்ளே தாழிடப்பட்டிருந்தது. விஸ்வநாதன் செட்டியார் வாயிலண்டை சென்று, "விசாலாட்சி, விசாலாட்சி" என்று பன்முறை கூப்பிட்டார். பதிலில்லை. விசாலாட்சி உண்மையில் தான் நெடுநாளாக அந்தரங்கமாய்க் காதலித்துவந்த ஆசைக் கொழுநனோடு இன்பப் பெருவெள்ளத்திலழுந்தியிருந்தாள். பெருவெள்ளத்தில் ஆழ்ந்திருப்பவர்கட்கு செவி கேட்கவும் கண் தெரியவும் செய்யாதன்றோ? எனவே செட்டியார் கத்திய கத்தெல்லாம் பாழாயின. நெடு நேரம் கூப்பிட்ட பிறகு விஸ்வநாதன், விசாலாட்சி தூங்கிவிட்டாளென்று எண்ணி, மனைவியிடம் கூற, மனைவியாகிய அலர்மேலு தன்கையிலிருந்த, சாவிபால் கொல்லைப்பக்கத்துக் "கடவை"த்திறந்து உட்சென்று தலைவாயிலைத்திறந்தாள். அதன்வழியாகசெட்டியார் உட்புகுந்து தான் எடுத்துச் சென்றிருந்த கைக்கடிகாரம், வைரமோதிரங்கள், சங்கிலிகள் ஆகியவற்றை தன் பெட்டியில் வைப்பதற்காக படுக்கை யறைக்குச் சென்றார். அப்போதுதான் விசாலா தந்தையின் சத்தத்தைக் கேட்டு தன் சுமங்கலி வேஷத்தைக் கலைக்க முயன்றுகொண்டிருந்தாள். செட்டியார் அதனை நேரில் பார்த்தார்; பார்த்ததுதான் தாமதம்; வந்தது கோபம். தனது ஏக புதல்வி விசாலாட்சி—விதவைப் பெண்—வீட்டுக் காவலுக்காக வைக்கப்பட்ட ஒரு விதவை—தூங்கிவிட்டாளென்று அவர் எண்ணிய "அருமைக் குழந்தை"—எந்நாளும் கற்புத் தவறாது ஒழுகுகின்றாளென்று எண்ணப்பட்ட "செல்வி"—அவரது ஏக புதல்வி-இருந்தகோலத்தைக்

கண்டதும் தலைகால் தெரியாமல் கோப வெள்ளத்தில் மூழ்கினார். வியப்பொரு பக்கம், வெட்கமொரு பக்கம், கோபமொருபக்கம், தாபமொருபக்கம், நாணமொருபக்கம், நகைப்பொரு பக்கமாக அவரை அங்குமிங்கும் அசைத்தது. ஒன்றிரண்டு நிமிஷம் அவர் தாம் காண்பது கனவா நினைவாவென்றறியாது தத்தளித்தார். அப்பால் இன்னுமொரு தடவை பார்த்தார். விசாலாட்சி உயிரற்று, உணர்வற்று, ஓடி மறைந்துகொண்டிருந்தாள். செட்டியாரை கோபம் குடுமியைப்பிடித்தசைத்தது. கைகால்கள் விலவிலத்தன; உடம்பெல்லாம் அக்கினிப்பட்டாற் போல இரத்தம் கொதித்தது. நாவெழவில்லை. இருதயம் படீர் படீரென்று அடித்தது. "ஏ, விஸ்வநாதா, பார்த்தாயா உன் அருமைப் புதல்வியின் செய்கையை, அவளது மனோநிலைமையை"யென்று இருதயம் கேட்டது. செட்டியாருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. தனது மானம், குலம், ஆஸ்தியெல்லாம் அடியோடு அழிந்து கெட்டு மண்ணாய் நாசமாய்ப் போய்விட்டதாகத் தோன்றியது. தான் தற்கொலை புரிந்து சாவதா, கடலில் வீழ்வதா வேறு என் செய்வது என்று தெரியாது தத்தளித்தார். உடனே கால்கள் பின்னடந்தன. அவர் கீழிறங்கினார். அவர் வைத்த ஒவ்வொரு அடியும் விசாலாட்சியின் நெஞ்சில் மிதித்தது போலவிருந்தது. கோபம் பொங்கிப் பொங்கி வழிந்தது. 10 அடி நடந்து கீழேபோக முயன்றதும் ஆச்சி தான் எடுத்துச் சென்ற சில நகைகளை வைப்பதற்காக மேலே வந்து கொண்டிருந்தாள். அவள் செட்டியாரைக் கண்டதும் விசாலா எங்கே என்றாள். செட்டியார் "ஆ! வீணாய்க் குடிகெட்டதே, இனி என் செய்வேன்;

அறையில் சென்று பார்" என்றார். அவர் சொல்லையும் தோற்றத்தையும் நடையையும் பார்த்த ஆச்சி ஒன்றும் புரியாது அறைக்குள்போனாள். அங்கு விசாலா சேலையை அவிழ்த்துப் போட்டுவிட்டு ஜாக்கட்டைக் கழற்றிக் கொண்டிருந்தாள். அலர்மேலு அதனைக் கண்டதும் "அடி யாத்தி! விசாலா கெடுத்து விட்டாயே குடியை," என்று தொடங்கி பேசினாள் பேச்சு. மோனை எதுகை பெற்ற பதங்களும், சீர் தளை தட்டாத தொடர்களும் ஒரு பதத்தையே குறிக்கின்ற பல் பதங்களுமாக ஓராயிரத்தை ஒன்றாக அணுத்துணையும் தாமதமின்றி சரமாரியாக விடுத்தாள். இடையிடையே "குலத்தைக் கெடுத்தாயே, கோடாரிக் காம்பானாயே" என்பனபோன்ற அகவலடிகளும் பல வெளிவந்தன. பட்டுக்கிடப்பாய், பாழாய்ப்போவாய் என்ற ஒரு தொடர் சுமார் 5 நிமிஷ நேரம் பானு மோனையிலேயே நீண்டு வந்தது. சுருங்கச்சொன்னால் அலர்மேலு ஆச்சியின் கோபமும் பேச்சும் எல்லை கடந்ததாயிற்று.

இத்தகைய பேச்சைக் கேட்டுக்கொண்டே விசாலாட்சி தனது ஸ்திரீபார்ட்டைக் கலைத்துவிட்டு வெள்ளைக் கொலையாடையைப் பூண்டாள்.

## அத்தியாயம் 6.

### எரியுந்தீயில் எண்ணெய்.

நாம் முந்திய அத்தியாயத்தில் கூறிய சம்பவத்தைக் கண்டதும் அலர்மேலு வினுடையவும் விஸ்வ

நாதனுடையவும் இயற்கைக் குணம் வெளிப்படத் தொடங்கியது. அலர்மேலு தான் இளமையிற்கற்ற பாடம் முழுவதையும் கக்கலானாள். "ஏ! விடுவேனு சிறுக்கியை; அறுத முண்டை. என்ன பாவம் செய் ததினாலோ தாலியிழந்து தவிக்கிறாள். அப்படிப்பட் டவள் தெய்வமே துணையென்று ஒரு மூலையில் விழு ந்து கிடக்காமல் அவளுக்கு ஜாக்கட்டாம், நகையாம், சவ்வாதுப் பொட்டாம், பட்டாடையாம், காலில் மிதி யடியாம், விளக்குமாறும். என்னென்ன வெல்லாம் தேவை? மாங்கல்ய மிழந்தவள் வீட்டில் கிடக்கட்டு மென்று விட்டுவைத்தால் ஆளில்லாத வேளையில் அறையில் போகிறாள், அழகு செய்கிறாள், சிங்காரிக் கின்றாள். கேட்பார் கேள்வியில்லை யென்றால் இப்படித் தான்வரும். ஒரு புருஷனைக் கட்டிக்கொண்டால் இன் னும் கொஞ்சம் அதிகமாக சிங்காரிப்பாள் போலிருக் கிறது. நாயே, உனக்கு சிங்காரமாவேண்டும்? அறுப் பாள், குலத்தைக் கெடுக்கவா பெண் பிறந்தாய். ஈன ஜாதிமாதிரி எப்படி எப்படித்திரிகின்றாய். நீயிறந்து உன் புருஷன் இருக்கக்கூடாதா? கதை கெட்ட கழு தை" என்று தொடங்கிய பேச்சிற்கு ஓர் எல்லை கூற முடியாது. தனது உடைமையை யெல்லாம் விசாலா ட்சி கொள்ளையடித்து விட்டாற்போல வானமும் பூமி யும் தவிடுபடப்பேசினாள். அவளுக்கு மகள் சிங்கா ரித்ததைவிட தன் சொந்த படுக்கையறையையும் அதன் இயல்பினையும் அறிந்து விட்டாளே என்பது அதிகமான எரிச்சல். அதோடு தம் மகளுடைய கற் புக் கெட்டுவிட்டதே யென்பது இன்னொரு சங்கடம். மூன்றாவதாக தம் மகள் அடிக்கடி இப்படுக்கை யறைக்கு வந்து விடுவாளோ யென்பது வேறொரு

கவலை. இவைகளெல்லாம் சேர்ந்து ஆச்சியை தலைகால் தெரியாமல் ஆட்டிவிட்டன. அன்று இரவு வெகு நேரம் வரையிலும் ஆச்சி வாய் மூடவேயில்லை. சமய லறைக்குள் சென்றபோதும் வேலைக்கார சிகப்பியை கூப்பிட்டபோதும் தண்ணீர் மொண்டபோதும் பாத் திரங்களை அடுக்கியபோதும் விசாலாவையே வாழ்த் திக்கொண்டிருந்தாள். எட்டுணையாவது அவளுக்கு தனது அட்டகாசத்தால் தன் புதல்வியின் மானத் தைக் கெடுக்கின்ருளென்ற உணர்ச்சியில்லை. தன் புதல்வியின் மானம் அழியும்போது தன்னுடைய மானமும் காற்றில் பறந்துவிடுகின்றது என்பதனை யும் அறிந்தாளில்லை. அறிவு கெட்டு படிப்பு வாசனை யற்று வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக்கிடந்தால் எப்படித்தான் பகுத்தறிவு வரும்?

அலமியின் கதை யிதுவாக, செட்டியார் நிலை யென்னவென்பதை சிறிது கவனிப்போம். அவர் அடக்கொணு கோபத்தோடு கொஞ்சநேரம் பேசி விட்டு மௌனமாக படுக்கையறைக்குச் சென்ருர். அங்கு விசாலா கழற்றிப்போட்ட நகை, துணி, மிதி யடி முதலியன அப்படியப்படியே கிடந்தன. அவ ற்றையெல்லாம் வயிற்றெரிச்சலோடு பொறுக்கி அவ் வவற்றிற்கு உரிய விடங்களில் வைத்து ஓர் நாற்காலி யில் உட்கார்ந்தார். அவருக்குக் கோபத்தை அடக்க முடியவில்லை. பல தடவை விசாலா வுட்கார்ந்திருந்த இடத்தைப் பார்த்துப் பார்த்து வயிறெரிந்தார். அப் போது தற்செயலாக, விசாலா தம் காதலன் கையி லிருந்து பிடுங்கிச் செருகி வைத்திருந்த கடிதம் வெளி யே எட்டிப்பார்த்துக்கொண்டிருப்பது அவர் கண்

ணில் விழுந்தது. சனியன்! இந்த சமயத்தில் ஏன் வெளியே எட்டிப்பார்க்கவேண்டும்?

கடிதத்தைக்கண்டதும் விஸ்வநாதன் அதனைப் பொருக்கென வெடுத்து உடைத்துப் பார்த்தார். அது மேலே மூன்றுவது அத்தியாயத்தில் காட்டிய கடிதமாகவிருந்தது. உடனே அவருக்குத் தனது புதல்வி சுமார் 1 வருஷமாக எவருக்கும் தெரியாது தியாகராஜனோடு நட்புக்கொண்டிருக்கின்றுளென்ற உண்மை தெரிந்தது. அப்போது பல விஷயங்கள் அவரது அகக்கண்முன் தோன்றின. சிற்சில வேளைகளில் தம் புதல்வி சோர்வுற்றுத் தோன்றியதும், வெளியே செல்லாமல் வீட்டுக்குள் பதுங்கி இருந்ததும், இவை போன்ற பலவும் அவர் ஞாபகத்துக்கு வந்தன. அதோடு தியாகராஜனைக்கண்டு சில நாள் ஓடிமறைந்ததின் கருத்தையும் முணர்ந்துகொண்டார். சென்ற ஒரு வருஷமாக தமது மகளின் சரித்திரத்தில் நடந்த பல சம்பவங்கள் அசைவு படம்போல் வந்து வந்து மறைந்தன. வெகுநேரம் அவற்றை அலசி ஆராய்ச்சி செய்து பார்த்தார். முடிவில் தம் மகளுக்கும் தியாகராஜனுக்கும் தேக சம்பந்தம்கூட இருந்திருக்கலாமென்று யூகித்தார்.

இவ் யூகம் வந்ததுதான் தாமதம்; கடிதத்துடன் ஆச்சியிடம் வந்து கதைபடிக்க ஆரம்பித்தார். அதனைக்கேட்டால் ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த ஆச்சியின் கோபம் என் செய்யும்? எண்ணெயை வார்த்தால் போல கொழுந்து விட்டு எரியத்தொடங்கியது. உடனே அம்பேற்று வெருண்ட சிறுத்தை

போல அடுத்த வீடுகளும், பக்கத்து சந்துகளும் அறியத் தகுந்த முறையில் புத்தியில்லா முழுமூடமாகிய அலமி பற்பலவாறு ஏசத் தொடங்கினாள். வேலைக்கார சிகப்பி இத்தனையும் கண்டு "இப்படியா விசாலாவின் சங்கதி" என்றெண்ணிக் கொண்டாள். மறுநாள் காலையில் தனக்கு யார்யாரிடம் சொல்லவேண்டுமோ அவர்கட்கெல்லாம் பறை சாற்றிவிட்டாள். எனவே சுருங்கச் சொன்னால் சம்பவம் நடந்த தினத்துக்கு அடுத்த நாள் ஊர் முழுதும் இதுவே பேச்சாகவிருந்தது.

## அத்தியாயம் 7.

### அம்பேற்ற மான்.

விசாலாட்சிக்குத் தன் தாய் தந்தையர்களுடைய செய்கைகள் எவ்வாறு தோற்றின என்பது எழுத முடியாத விஷயமாம். பலதடவை அவள் "என்னே என் தாய் தந்தையர்களுடைய பேதமை! பிறருக்குத் தெரியாதிருக்கும் ஓர் விஷயத்தை எவ்வளவு மதிகெட்ட முறையில் வெளிவிடுகின்றனர்? தன் புதல்விக்கு, வரும் அவமானம் தங்களையும் சாருமென்பதனை உணர்கின்றார்களில்லையே. வேலைக்காரி கூடவன்றோ எங்கும் கூறித்திரிகின்றாள். ஊரார் முழுதும் என் இரகசியத்தைஉணர்ந்தும் விட்டார்களே. என்செய்வேன்? இத்தனைக்கும் என் அறிவற்ற தாய்தந்தையரன்றோ காரணம்" என்று தனக்குள் எண்ணிக் கொண்டாள். இவ்வெண்ணம் சம்பவம் நடந்து இரண்டு நாட்களாக அடிக்கடி அவள் மனதில் தோன்றிக்கொண்டே யிருந்தது. அவ்விரண்டுநாளும் அவள் நீர்மூழ்கவோ, உண்

ணவோ, உறங்கவோ, உடுத்தவோ செய்யவில்லை. அல்லும் பகலும் கிடந்த இடத்திலேயே கிடந்து அழுது அழுது தனது எதிர்காலம் எப்படி யிருக்குமென்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். அப்போது தற்செயலாக (இரண்டாவது நாளிரவு) சிறிது நேரம் கண்ணயர்ந்தது. 5 நிமிஷம் தூங்கியதும் தூக்கத்துக்கு பங்கம் விளைக்குமாறு ஒரு கனுவந்தது.

அக்கனு யென்னவெனில், விசாலாட்சி பச்சைப் பசிய ஓர் காட்டின் வழியாகப் போய்க்கொண்டிருந்தாள். அக்காட்டில் ஜனசஞ்சாரத்திற்காக அகன்ற இடம் காலியாக விடப்பட்டிருந்தது. அதில் சுதந்தரமாகக் கைவீசி யோடியாடி எவருக்கும் நடக்கத்தகுந்த அளவு இடம் இருந்தது. ஆனால் அதனை யெல்லாம் விட்டு விட்டு விசாலாவுக்கு ஓர் சிறிய மதிலின் வழியாக நடக்கவேண்டி யிருந்தது. அம்மதில் மிக மிகப் பண்டைகாலத்தில் கட்டப்பட்டதாம். சிறிதேனும் அடிபலமில்லாமல் ஆடிக்கொண்டிருந்தது. அதில் செல்வது மிக மிகக் கஷ்டமென்பது சந்தேகமற்ற விஷயம். அந்த வழியே இதற்கு முன் பலர்நடந்து சென்று தவறி விழுந்ததனுலேற்பட்ட வடுக்கள் பல தெரிந்தன. இவ்வழியிலிருந்து இறங்கி சுயேச்சையாக நடக்க அவள் விரும்பினுள்; ஆனுல் ஒரு பெரும் கூட்டத்தார், அவளுக்குக் கடுமையான கட்டளையிட்டு தவறினுல் வெட்டிவிடுவதாக கத்தி, ஈட்டி, வாள்முதலிய வற்றுடன் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களிடம் சில பாந்த நோக்கமுடையமக்கள் "ஐயன்மீர்! அது வழியேதான் நடக்க வேண்டுமென்று ஏன் சட்டம் செய்கிறீர்கள்?

அகன்ற இன்பமயமான விடம் பார்த்துகிடக்க ஏன் ஒரு சிறுபாதை வழியாக போகவிடுகின்றீர்கள்? மக்கள் இன்பமாக வாழக் கூடாதென்பதோ கருத்து?" என்றார்கள். பெரிய கூட்டத்தார் அவர்களை முரட்டுத்தனமாக உதைத்துத் தள்ளினர். அந்த கொடியகாட்சியைப் பார்த்து விசாலா மனம் கன்றி மேலே நடந்தாள். சிறிதுதூரம் போனதும் பெரிய அகழிகளும், ஓடைகளும் குறுக்கிட்டன. அவற்றோடு மலைகளும், பாறைகளும் கூட முட்டிமோதி எழும்பி நின்றன. அவற்றை எல்லாம் பலவிதமான முட்கள் மூடியிருந்தன. விசாலாவுக்கு தன் பிரயாணத்தின் முடிவு அவ்வகழிகளில் வீழ்வது தானென்று தோற்றிற்று. எனினும், பின்னின்ற பெருங்கூட்டத்தாரின் கொடுமைக் கஞ்சிமேலநடந்துபோக, அகழியின் ஓரம் வந்தது. அதற்குள் உற்று நோக்கினாள். அங்கு பெரும் பாம்புகள் வாய்பிளந்து, அவளது வருகைக்குக் காத்துக்கொண்டு நின்றன. அவற்றின் தோற்றம் விசாலாட்சியை நடுங்கிக் கீழே விழச் செய்தது. விழத் தொடங்கியதும் அழகிய தியாகராஜன் திடீரென்று தோன்றி அவளது வலக்கரத்தைப் பற்றித் துணைபுரிந்தான்.

இந்த விடத்தில் விசாலாட்சி பொருக்கென விழித்தெழுந்து கண்ணைத் திறந்தாள். அங்கு தியாகராஜனுமில்லை; அகழியுமில்லை. வெறுங்கனவே யென்று விளங்கிற்று. இக்கனவின் கருத்து யாதாயிருக்குமென்று யோசித்தாள். நீண்ட யோசனைக்குப் பிறகு தனது வைதவ்ய ஜீவிதமே மதிலின் மேல் நடப்பது போன்று தோற்றிற்று

என்று தெரிந்தது. "ஆ! எனது விதவை வாழ்க்கையா இவ்வளவு கொடுமையாகத் தோற்றுகிறது. நான் இவ்வித வாழ்வா வாழவேண்டும்? அவ்வாழ்வின் முடிவு அழிவுதானு? என் அழகிய தியாகராஜா! நீயே அவ்வாழ்வினின்றும் உய்வித்தாய். நான் ஏன் இவ்வளவு தொல்லைகட்காளாகி உயிர் வாழவேண்டும்? விதவையாயிருந்தாலும் கொடுமை; மண வாழ்க்கையை நினைத்தாலும் கொடுமை; எங்கும் கொடுமை; எதனினும் கொடுமை...........எல்லாம் போகட்டு மென்றாலும் என்றாய் தந்தையர் போன்றார்களிடத்தில் உயிர் வாழவே முடியாது. இரகசியமான அவமானத்தையும் பரசியமாக்கி விடுகின்றார்கள். ஆ! நானேன் உயிருடனிருக்கவேண்டும்?..........." என்று தனக்குள் கூறினாள்.

இங்ஙனம் வெகு நேரமானதும் அவளது மனம் குழப்பக்கடலில் மூழ்கி நின்று பின் ஓர் முடிவுக்கு வந்தது. எனவே காலை ஆறுக்கு ஓர் கடிதத்தைஎழுதித்தம் வீட்டுக்கருகிலிருக்கும் தபால் பெட்டியில் போட்டு விட்டு வீட்டிலிருந்து வெளிப்பட்டு நெடுகநடந்தாள். நடநதாளென்றால் எவ்வளவு தூரம்? பல மயில்களா நடந்தாள்? இல்லை. அவள் நடந்த தூரம் சற்றேறக்குறைய 1 பர்லாங்கே. அதுவும் நேராக நடக்கவில்லை. தம் வீட்டின் பிற்புறக் கதவுவழியாக வெளிப்பட்ட அவள் இரண்டு சந்துகளையும் ஒரு சிறு வீதியையும் கடந்து சித. க. அழ. சா. அவர்களின் வீட்டுக்குப் போனாள். எப்படிப்போனா ளென்றால்—எவ்வண்ணமோ? அவள் அவ்வீட்டின் பிற்புறக் கதவு திறந்திருப்பதை உணர்ந்திருந்தாள். அதன் வழி

யாக உட்சென்றாள். அவ்வீட்டில் எவரும் இல்லை. அவ்வீட்டுச் சொந்தக்காரரான திரு. சாந்தப்ப செட்டியார் தொலைக்குப் போயிருந்தார். அவரது ஏக புதல்வியும் மனைவியாரும் கிழசிவற்பட்டியிலுள்ள பங்காளி வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். அவ்வீட்டின் கொல்லைப்புறக் கதவு வழியாக உட்சென்ற விசாலா தன்கையிலிருந்த ஒரு சாவியால் கதவொன்றைத் திறந்து வீட்டுக்குள் புகுந்தாள். அங்கு இருள் மூடியிருந்தது. பகலவன் கண்ணைத் துடைத்துக்கொண்டு அப்பொழுதுதான் உலகைப்பார்க்கப் போனான். எனவே மிகமிகச் சிறிய வெளிச்சமே அவ்வீட்டுக் கண்ணாடிச் சாளரம் வழியாக உள்ளே புகுந்து கொண்டிருந்தது. வெளியே ஒருவரிருவர் பேசிக்கொண்டு சென்றார்கள். அவர்களது பேச்சு தூக்கத்திலாழப் போகிறவன் காதில் விழுந்த சத்தம் போல் கேட்டுக்கொண்டிருந்தது. விசாலா எதனையும் பொருட்படுத்தினளில்லை. அவள் தனது துணிச்சலை எட்டுணையும் விட்டாளல்லள்.

விசாலா அங்கு சென்று 3 நிமிஷமானதும் தன் கையிலிருந்த ஓர் கத்தியை வெளியே எடுத்தாள். எடுத்து அதனை நோக்கி ஒருவித நகைப்பு நகைத்தாள். பின் "ஏ! கத்தியே! நீயே எனது துணைவன். நின்னோடு பெற்ற நட்பே நட்பு. உடுக்கையிழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்றமாதிரி நான் மானமாகிய உடுக்கையை அஞ்ஞானம் நிறைந்த என் தாய் தந்தையரின் முன் இழந்து நிற்கையில் என் இடுக்கணைத் தீர்க்கப்போகிறாய். நீ நீடூழிவாழ்தி! நீ செய்யப்போகும் உதவி என்றும்

மறத்தற் பாலதன்று. நின்னை இன்று அல்லது நாளை உலகமெடுத்து நோக்கும்; நிந்திக்கும். நீயாதும் கூறாதே. நீ சாட்சி சொல்லமாட்டா யென்றே நின் துணையைக் கோருகின்றேன்.

ஏ! ஆபத்பாந்தவா! நினக்கு ஓர் நல்லதருணம் இன்று கிடைக்கப்போகின்றது. அதாவது என் தியாகராஜன் அறிந்த பிறகு நீதான் என் உண்மையான மனோநிலையையும் திண்மையையும் அறியப் போகின்றாய். என் தியாகராஜன் யூகத்தாலோ அனுபவத்தாலோ என் மனதை உணர்ந்து கொண்டான். ஆனால், நீ அவ்விருதயத்தைப் பிளந்து ஊடுருவிச் சென்று அதன் இயல்பினை நேர்முகமாகக் காணப் போகின்றாய். எனவே நீ தியாகராஜனினும் சிறந்தவனே. அத்தியாகராஜனுக்கும், என் தாய்தந்தையருக்கும், என் சுற்றத்தாருக்கும், இப்பாருலகத்திற்கும் காதலின் வலிமை யென்ன திறமுடையது என்பதனையும், என் மனதில் கிளர்ந்த காதலின் திண்மை என்ன வென்பதனையும் நீ காட்டுதி.

ஏ! உலகே! நீயும்என் காதலின் திறனைக் காணுதி. உனக்கு ஓர் சோதனையாக என் மார்பைப் பிளந்து என் காதலைக் காண்பிக்கப் போகின்றேன். நீ இனியேனும் நின் அறியாமையை அகற்றுவாய். என் போன்ற பல்லாயிரம் மங்கையரும் விதவைகள் என்று நீ எண்ணுகின்ற பெண்மணிகளும் காதலிற்காக வாடுகின்றனர். அவர்களை நீ நின் தீய முறைகளால் வருத்துகின்றாய். அதிலிருந்து அவர்களை இரட்சிப்பதற்காகவே நான் இன்று சோதனை காட்டுகின்

றேன். இதோ இந்தக்கத்தியின் மூலம் அதனை அறிந்து கொள்ளுவாய்.

என் உளத்தில் நடனமிடும் உறுபொருளே! தியாக ராஜா! நீ யன்று தியாகம் செய்தவன். இதோ நான் என்னை தியாகம் செய்கின்றேன். நமது காதல்கதை இன்றோடு ஒழிந்தது. இதுகாறும் இப் பாழு லகம் நமது காதலுக்கு முட்டுக்கட்டை போட்டு நின் றது. அம்முட்டுகட்டையை உடைத்து எறிந்து விடு கின்றேன். என் காதற்கனியே! நின்னை எவ்வளவு ஆர்வமாக, அன்பாக, அளவுகடந்த உணர்ச்சியோடு காதலித்தே னென்பதை இதோ கண்டுகொள்க. எல் லோரும் விடைதருவீர்களாக. தியாகராஜா! நீ நீடுழி வாழ்க. இறப்பவளாகிய நான் நின்னை மனமாரவாழ்த் துகின்றேன். இதோ போகின்றேன்" என்று மொழிந்தவண்ணம் நம் நாரீமணி காதற்கழஞ்சியம் ஒப்பற்ற எழில் குவியல், கவின்மலை தம் கையிலி ருந்த கத்தியால் மார்பில்.........ஆ! என்னென்போம்! கொடிது! கொடிது!! உலகின் கொடுமை. ஏ! பேதை உலகே! வீணாக ஓர் இள மங்கையை ஒப் பற்ற காதற்பிழம்பை, கன்னியர் கரசியை கொன்று விட்டனையே. ஆ! பேதை உலகே. நீ இறந்தொ ழிந்து அழிந்து மாளாயோ! நின் தீய முறையும் கொடிய பழக்கமும், கோதுறை வழக்கமும் சீ! சீ!! என்னே !!! என்னே!!! தூவென்று தள்ளுகின்றோம்.

விசாலா கத்தியால் நெஞ்சில் குத்தினாள். குத்து எவ்வளவு அபாயம், ஆழம், எங்கு சென்றது? எம க்கு விளங்கவில்லை. நெஞ்சிலிருந்து இரத்தம் ஆறாக ஓடிற்று. அரைக்கணத்தில் அவளது வெள்ளைத்

துகில் செந்துகிலாயிற்று. கைகால்கள் அப்படி அப்படியே தரையில் கிடந்தன. கத்தி நெஞ்சில் நின்றது. நமது பூங்கொத்து விசாலா மல்லாந்து கிடந்தாள். கண் விழித்து மூடிற்று. முகம் வியர்வை கண்டு இருண்டது. வாய் பன்முறை திறந்து மூடிற்று. தியா..........தியா..........நீ..........நான்.......... என்ற சில பதங்கள் அரை குறையாக வெளிவந்தன. குத்தி 5 நிமிஷம் அங்கு மிங்கு முருண்டாள். ஏற்கனவே தரையில் புரண்டிருந்த ரத்தம் அவளது கை கால்களால் எங்கும் வியாபித்தது. அதிகமேன்? விசாலா இறந்து கிடந்தாள். ஓர் அன்னப்பறவை கொடிய வேடனின் கணையேற்று இறந்தாற்போல உயிர் துறந்து கிடந்தாள். கானவன் எய்த அம்பேற்று உயிர்விட்ட பேடை மான்போல் விழுந்து கிடந்தாள்.

ஆ! போயிற்று அவளது ஆவி. கழிந்தது அவளது வாழ்நாள். முடிந்தது அவளது கதை. அவளை என்று நாம் மீண்டும் காணப்போகின்றோம்? என்று விஸ்வநாதனென்னும் பேதை காணப்போகின்றார்? என்று அலமி என்னும் பேய் காணப்போகின்றது? ஏ பேயே! நின் வாக்கம்பும், வகையறியா பேச்சும், வாளொத்த திட்டுமன்றோ விசாலாவின் உயிரைக் குடித்தன? சீ! பேதை கல்வியிலா முண்டமே-உலகமறியா பிண்டமே—நாகரிகமிலா தசைத்துண்டமே—நீ இன்னும் சிறிது நேரத்துக்குள் அழப்போகின்றாய்; உளம் மெலிந்து வாடி இறக்கப்போகின்றாய். "ஏ விசாலாட்சி! நீ மீண்டும் வருக—நினக்கு மணமுடிக்கின்றேன்—நின் காதலனோடு கூட்டுவிக்கின்றேன்—எவர் என்ன பழி கூறினும் பொறுத்துக்கொள்கின்றேன்—நீ வருவாய், நீ வருவாய்" என்று பிதற்றப்போகின்றாய். நின் போன்ற பேடிகட்கு அனுபவித்த பிறகு தான் பூர்வ ஞானம் வரும். பேதையே—மனிதப் பதரே! அழுது அழுது செத்தொழிந்துபோ—நீ நின

க்கு கிடைக்க இயலாத ஓர் கருத்தனத்தை இழந்தாய். நீயும் நின் புருஷனும் கட்டிக்கொண்டு அழுங்கள்.

மணி யத்தடித்தது, தியாகராஜன் அளவிறந்த மனத் தாங்கலோடு வீட்டுக்குள் ஓர் நாற்காலியில் உட்கார்ந்து எதெதுவோ யோசித்துக்கொண்டிருந்தார் அப்போது தபாற்காரன் ஓர் கடிதத்தைக் கொடுத்தான். அவர் உடைத்துப் பார்த்தார். அதிலடியில் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

**கடிதம்.**

பள்ளத்தூர்.
தேதி 10—9—1929.

காதலா!

வணக்கம்.

தாங்கள் நீங்கிய பின் நடந்த விஷயங்கள் என்னுயிரை இன்று காலையில் குடிக்கின்றன. என் பிணத்தை சித.க.அழ.சா. வீட்டில் காணுங்கள். வணக்கம். க்ஷேமமே வாழ்க.

இங்ஙனம்,
உயிர் விடும் விசாலா.

இதனைக் கண்டதும் யாதும் புரியாது தியாகராஜன் ஒரே ஓட்டமாக சாத்தப்பச்செட்டியார் வீட்டுக்கு ஓடினார். கதவு திறந்திருந்ததால் எளிதில் உள்ளே நுழையவியன்றது. சரேலென்று மேற்கூறிய அறைக்குச் சென்று பார்த்தார். விசாலா குண்டு பாய்ந்து இறந்த மயில்போல் கிடந்தாள். ஆ! அந்தக் கோரக் காக்ஷியைப் பார்த்து எவ்வாறு சகிப்பார் நம் காதற் கழஞ்சியம். தியாகராஜனும் அதே கத்தியின் துணையை நாடினார். நெஞ்சில் குத்தினார். விழுந்தார். முடிந்தது கதை. இரு பிணங்கள். இரு பிணங்கள். இரு பிணங்கள். இரண்டும் பக்கத்தில் கிடந்தன.

அப்பால் யாது நடந்திருக்கும்?

C. 2. 172.